கழக வெளியீடு - ௫௯

உ

திருச்சிற்றம்பலம்

# அறிவு விளக்க வாசகம்

சென்னை,
எம்.ஏ.,எம்.எல்., அட்வகேட்
**திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள்**
எழுதியது

*Approved by the Madras Text-Book Committee
for class use vide page 212 Fort St.,
George, Gazette dated 2-5-1939.*

திருநெல்வேலி, தென்னிந்திய
**சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,**
திருநெல்வேலி & சென்னை.
பிரமாதி௵ - ஆடி மீ

(3rd Edition.)

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
TIRUNELVELI, & MADRAS.

July, 1939.

1837

(All Rights Reserved)

Printed at Shakti Press Ltd. (Shanti Press, Madras.),

# முகவுரை

சட்ட கலாசாலைப் பேராசிரியர் **கா. சுப்பிரமணிய பிள்ளை**, M. A., M. L., அவர்கள் எழுதிய 'அறிவு விளக்க வாசகத்தை'க் கண்ணுற்றுப் பெரிதும் களிகூர்ந்தோம். செந்தமிழ் மொழியின் விழுத்தகு கல்வியும் ஆங்கில மொழியின் பழுத்த புலமையும் ஒருங்கு வாய்ந்து திகழும் பிள்ளையவர்கள் நம் இளைஞர்கட்கும் தம் அறிவைப் பயன்படுத்துமாறு இது போன்ற வாசகங்களை எழுத முற்போந்தமைக்குத் தமிழுலகம் என்றும் அவர்க்கு நன்றி பாராட்டும் கடப்பாடுடையதாம்.

மக்கள் அனைவரும் தம் இளமைப் பருவத்துத தாம் பயின்ற முறையே தம் மனோபாவனை முறுகி வளரப்பெற்று அம்முதிர்ச்சி வழித்தாய உலகியலின் மனப் பாங்குடையராய் வாழ்ந்துவருதல் கண்கூடாதலின் அவ்விளமைச் செவ்வியிற்றானே உண்மையறிவு விளக்கத்திற்கு ஏதுவாய கடவுள், உலகம், சமயம் என்னும் இத்தொடக்கத்து உறுதிப்பொருள்களை மக்கள் மனப்புலன் நிரப்புமாறு, பிள்ளையவர்கள் இவ்வாசகத்தை எழுதிய வித்தகம் யாவரானும் பாராட்டற்குரியது. இதனைக் கற்றுவல்ல மாணவர்கள் மேல் வகுப்புக்களில் தாம் கற்க விரும்பும் எத்துறையினும் தக்கார் என விளங்குதலுடன், உண்மைத் தமிழ்ச்

செல்வர்களாக விருந்து தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் பெரும் பயன் விளைப்பார்கள் என்பது ஒருதலை.

இப்பொருட் பாகுபாட்டுடன் தனித்தமிழ்ச் சொல்வள மிக்க இவரது இனித்த நடையின் நல்லழகு மாணவர்க்கு மிகுதியும் வேண்டப்படுவ தொன்றும். இவ்வாசகத்தின் நடை வனப்பும் பொருட் சிறப்பும் கலாசாலை வகுப்புக்களுக்குப் பெரிதும் பயன் தரத் தக்க தொன்றும்.

சென்னைப் **பல்கலைக் கழக** மாந்தர்கள் இதற்கு வேண்டிய ஆதரவு அளிப்பார்களாயின் பல துறைகளி லும் சென்று விரிந்த பேரறிவினராகிய பிள்ளையவர் களால் தமிழுலகம் அடைதற்குரிய நலத்தினை மிக விரைவில் அடையும் என்பது சொல்லாமலே அமை யும். பிள்ளையவர்களின் உயரிய நிலையனைத்தும் நம் தமிழுலகம் நன்றுணர்ந்த தொன்றுதலின் பிறிதொன் றும் எடுத்துரைக்க விழைந்திலம். தமிழ் நலம் பரவுக.

பச்சையப்பன்
கல்லூரி, சென்னை.

**மோ. கந்தசாமி முதலியார்.**

# பொருளடக்கம்


முகவுரை

நூல்

| | | |
|---|---|---|
| கடவுள் | .... | க |
| உயிர் | .... | ௪ |
| உலகம் | .... | ௮ |
| உலகப் பகுப்பு (முதற்பாகம்) | .... | கக |
| ,, (இரண்டாம் பாகம்) | .... | க௫ |
| சமயம் | .... | உ௪ |
| நன்மை தீமை | .... | ௩௰ |
| ஒழுக்கம்-நல்லியல்பு | .... | ௩௫ |
| ,, நற்பழக்கம் | .... | ௩௮ |
| கல்வி | .... | ௪௫ |
| நூற்பரப்பு | .... | ௫க |
| தமிழ் | — | ௬௰ |

திருச்சிற்றம்பலம்

# அறிவு விளக்க வாசகம்

—(o)—

## க. கடவுள்

இந்த உலகத்திலே நாம் பார்க்கின்ற பொருள்கள் சிலவற்றிற்கு உயிருண்டு. சிலவற்றிற்கு உயிரில்லை. உயிருள்ள பொருள்களுக்கு அறிவு உண்டு. உயிரில்லாத பொருள்களுக்கு அறிவு இல்லை. மனிதன், விலங்கு, பறவை முதலியன அறிவு உடையவை. கல், மண், இரும்பு முதலியன அறிவு இல்லாதவை. அறிவுடைய பொருள்கள் தாமாகப் போக்கு வரவு செய்கின்றன. அறிவு இல்லாதவை அப்படிச் செய்வதில்லை. அறிவுள்ள மனிதன் ஒரு கல்லினை யெடுத்து எறிந்தால் அது மற்றொரு இடத்திற்குச் சென்று விழும். தானாக அந்தக் கல்லானது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்வதில்லை. இதனாலே நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால் அறிவுடைய பொருள் அசைத்தாலன்றி அறிவில்லாத பொருள் அசையாது. வெயிலிற்குக் காரணமாகிய ஞாயிறு மண்டிலமும், நிலவிற்குக் காரணமாகிய திங்கள் மண்டிலமும், வானத்தில் மின்மினிப் பூச்சி போலக்

காணப்படுகின்ற உடுக்களும் (நட்சத்திரங்களும்) நமது நிலத்தைப்போல் அறிவில்லாத பிண்டப் பொருள்களே. ஆனால் அவைகளெல்லாம் ஓடிச் சுற்றித் திரிவனவாகத் தெரிகின்றன. அவைகளை யெல்லாம் அப்படி ஒழுங்காகச் செலுத்துவதற்கு அறிவுடைய ஒரு பெரிய தலைவன் இருக்கவேண்டும். அவரை நாம் **கடவுள்** என்று கூறுகின்றோம்.

நாமும் இந்தப் பிறவி எடுக்கவேண்டு மென்று எண்ணிப் பிறக்கவில்லை. நாம் இறந்தபின் என்ன நிலை அடைவோ மென்றும் நமக்குத் தெரியவில்லை. ஏனென்றால் நம்முடைய அறிவு சிற்றறிவு. நம்மால் உலகத்தை நடத்த முடியாது. உலகத்தை நடத்துகின்ற தலைவனே அதில் வாழும் நம்மையும் நடத்துகின்றான். இதனாலே 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்று பெரியோர் கூறினர்.

எல்லாவற்றையும் படைத்துக் காப்பாற்றுகின்ற கடவுளே எல்லாம் அறிபவர். அவருக்கு அறிவிப்பவர் ஒருவருமில்லை. அவரே எல்லாருக்கும் அறிவை விளக்குபவர். அவர் எங்கும் நிறைந்தவர். அவருக்கு மேலானவரும் இல்லை; ஒப்பானவரும் இல்லை. அவருக்கு நாமெல்லாம் அடிமைகள். அவர் அளவிடப் படாத அருள் உடையவர். அவர் குற்றமற்றவர். அவர் எல்லையில்லாத இன்பத்தைக் கொடுப்பவர்.

நாம் எல்லாரும் நல்ல வழியில் நடந்து அவருடைய திருவடியை அடைந்து அளவில்லாத இன்

பத்தைப் பெறவேண்டு மென்பதே அவருடைய திரு வுள்ளக் கருத்து. ஆதலால் நாம் குற்றம் செய்தால் அவர் நம்மைத் தண்டிப்பார். எல்லா உயிர்களிடத் தும் நாம் இரக்கமுடையவர்களாக இருந்தால் நமக்கு அவருடைய திருவருள் கிடைக்கும். எல்லா உயிர் களும், எல்லா உடம்புகளும் அவருடைய கோயில் கள். எந்த நல்ல வடிவமாக அவரை நினைத்து அன் போடு வழிபட்டாலும் நமக்கு அவ் வடிவமாகநின்று அவர் அருள் செய்வார். கடவுளை நினைப்பதானது நம்மைக் கெடுதியான வழியில் நின்று பாதுகாத்து, நல்ல நெறியிற் செலுத்தி எல்லா வகையான மேன் மையையும் கொடுக்கும். ஆதலால் 'நின்றும் இருந் தும் கிடந்தும் நடந்தும் என்றும் சிவன்தாள் நினை' என்றார் பெரியோர்.

இதுகாறுங் கூறியவாற்றால், எல்லா வுயிர்களை யும் எல்லா வுலகங்களையும் நடத்துகின்ற கடவுள் ஒருவர் உண்டென்றும், அவர் உயிர்கள்மீது வைத்த பெருங்கருணையினாலே அவைகளுக்கு எல்லையில்லாத பேரின்பத்தைக் கொடுத்தற் பொருட்டே தீங்கு செய்தவர்கட்குத் தண்டனையும் நன்மை செய்தவர் கட்கு நற் பயனும் ஏற்படுத்தியிருக்கின்றா ரென்றும், அவருடைய திருவடிகளை மறவாது வழிபடுதலே உயர்ந்த நன்னெறி யடைவதற்கு நாம் செய்ய வேண் டும் பெருங்கடமையாகு மென்றும் தெரிந்துகொள் ளற்பாலதாகும்.

# உ. உயிர்

உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் அறிவுடையவை, அறிவில்லாதவை என்று இருவகைப்படும். அறிவுடையவை உயிருள்ளனவாகும். அறிவில்லாதவை உயிரில்லாதனவாகும். உயிருள்ள இடத்திலே அறிவு காணப்படுகின்றது. அறிவிற்கு அடையாளம் தானே அசைவது. உயிருள்ளவையெல்லாம் உடம்புகளோடு கூடி இருக்கின்றன. கண்ணால் பார்க்கப்படுவது உடம்பேயொழிய உயிரல்ல. ஓர் உடம்பில் உயிர் இருக்கின்றதென்பது அதன் செய்கையாலேதான் அறியலாம். ஓர் உடம்பில் உயிர் இருக்கும்பொழுது அது போக்கு வரவு செய்தலும், உணவு கொள்ளுதலும், அதனைச் செரிக்கச் செய்தலும், இன்பம் நுகர்தலும், துன்பத்தால் வருந்துதலும் காணப்படுகின்றன. உடம்பிலிருந்து உயிர் நீங்கிவிட்டால் இந்தச் செயல்கள் அதிலே காணப்படுவதில்லை. அறிவில்லாப் பொருள்களின் தன்மையே அந்த உயிர் நீத்த உடம்பிற்கும் இருக்கிறது. இதனால் அறிவில்லாத உடம்பு வேறு; அறிவுடைய உயிர் வேறு என்று தெரிகிறோம். உயிர் உடம்போடு தோன்றி ஒருகாலத்தில் அதனை விட்டுவிடுவதாயும் கண்ணுக்குத் தெரியாததாயும் உள்ள அறிவுடைய பொருளாகும். பிறந்தவுடன் உயிரின் அறிவு நன்றாக விளங்குவதில்லை. உடம்பு வளர வளர அறிவு விளக்

கம் எய்துகின்றது. உடம்பு வயதினாலும், நோயினாலும் தளர்ந்த காலத்தில் அறிகிற திறமை குறைகின்றது. ஆதலால் உயிரினுடைய அறிவு விளங்குவதற்கு உடம்பும் ஓர் இன்றியமையாக் கருவியாக இருக்கின்றது.

உடம்பின் தன்மைக்குத் தக்கவாறு உடம்பெடுத்த உயிர்களும் பலதிறப்படும். ஆதித் தமிழிலக்கண நூலார் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர் என உயிர்களை ஆறுவகையாகப் பகுத்திருக்கின்றார். தொட்டாலுணரக்கூடிய மெய்யுணர்ச்சி ஒன்றே உடையன **ஓரறிவுயிர்** என்றும், அதனோடு நாவாலறியும் சுவையுணர்ச்சியு முடையன **ஈரறிவுயிர்** என்றும், அவ்விரண்டனோடு மூக்கினால் மோந்தறியு முணர்ச்சியு முடையன **மூவறிவுயிர்** என்றும், அம்மூன்றனோடு காட்சியுமுடையன **நாலறிவுயிர்** என்றும், அந்நான்கனோடு செவியுணர் வுடையன **ஐயறிவுயிர்** என்றும், மேற்கூறிய ஐம்புலனோடு உள்ள வுணர்ச்சியு முடையன **ஆறறிவுயிர்** என்றுங் கூறப்படும். அவைகளுக்கு எடுத்துக்காட்டு (உதாரணம்):—

க. **ஓரறிவுயிர்**: புல், பூண்டு, மரம். உ. **ஈரறிவுயிர்**: புழு, பூச்சி. ந. **மூவறிவுயிர்**: சிதல், எறும்பு. ச. **நாலறிவுயிர்**: நண்டு, தும்பி. ரு. **ஐயறிவுயிர்**: பாம்பு பறவை, பல்விருகம் (விலங்கு) சு. **ஆறறிவுயிர்**: மனிதர், அசுரர்.

உடம்பானது நிலம், நீர், தீ, காற்று, வெளி என்னும் ஐம்பூதங்களின் சேர்க்கையால் உண்டானது. உலகமும் ஐம்பூதங்களின் கலப்பினால் உண்டானதே. உடம்பு வளர்தற்கு வேண்டிய உணவும், நீரும், காற்றும், உலகத்தின் பகுதிகளேயாகும். ஆதலால் உடம்பு கடவுள் படைத்த உலகத்தின் ஒரு பகுதியே யாகும். உயிரின் அறிவு விளங்குவதற்குக் கருவியாயுள்ள உடம்பை உயிர் தானே அமைத்துக்கொள்ள முடியாது, உடம்பும் தானே உயிரைச் சென்றடையாது. உலகத்தைப் படைத்த கடவுளே அதன்பகுதியாகிய உடம்பையும் படைத்திருக்கவேண்டும். ஆதலால் அக்கடவுளுடைய ஆட்சிக்கு உட்பட்டதே உயிராகும். கடவுளுடைய அறிவு அளவிடப்படாதது. ஆனால் உடம்பின் உதவியால் படிப்படியாய் விளங்குகின்ற உயிரினுடைய அறிவு ஓர் எல்லைக்கு உட்பட்டது. ஆதலால் கடவுளுடைய அறிவு **பேரறி**வென்றும், உயிரினுடைய அறிவு **சிற்றறி**வென்றும் சொல்லப்படும். கடவுள் எல்லாம் அறிபவர்; உயிர் எல்லாவற்றையும் அறிவதில்லை. கடவுள் தாமே யாவற்றையும் அறிபவர்; கடவுள் அறிவிப்பதினாலேதான் உயிர் எதனையும் அறியும். கடவுள் எல்லாம் செய்ய வல்லவர்; உயிருக்கு எல்லாம் செய்ய முடியாது.

அறிவே செய்கைக்கு அடிப்படையா யுள்ளது. கடவுளுடைய அறிவு முற்றறிவு. ஆதலாலே அவருடைய செயலும் எல்லையில் அடங்காதது. உயிரினுடைய

அறிவு சிற்றறிவாதலாலே அதன் செயலும் சிறுதொழி லேயாகும். ஆதலால் உயிர்கள் சிற்றறிவும், சிறு தொழிலும் உள்ளனவாய்க் கடவுளாகிய தலைவனை உடையன.

கடவுள் எப்போதும் நன்மையையே செய்பவர். தீமை செய்யாதவர். உயிர்கள் தம்முடைய அறிவுக்குத் தோன்றியபடி எதனையும் செய்யும். அப்படிச் செய் பவைகள் நன்மையாகவும் இருக்கும், தீமையாகவு மிருக்கும். கடவுள் தனக்கென யாதொரு பயனையுங் கருதாமல் தமது கருணையினாலே உயிர்களின் பயனையே கருதி அவ்வுயிர்கட்கு உதவி செய்கின்றார். உயிர் தன் நன்மையையே நாடி எல்லாம் செய்யும். ஆதலால் உயி ரின் தன்மை தன் பயன் கருதுவதாகிய சிறுமை எனப்படும். அஃது அறிவுடைய காலத்தில் ஒளியுடை யது. அறிவில்லாத காலத்தில் அதனை இருளில் நிற்ப தாகக் கூறலாம். அறியாமையை இருள் என்று சொல்லுவார்கள். கடவுளுடைய திருவருள் ஒளியி னாலேதான் உயிரினுடைய அறியாமை நீங்கும். அறியாமை முழுவதும் நீங்கிய முத்திநிலையில் அறிவ தற்குக் கருவியாகிய உடம்பு உயிருக்கு வேண்டிய தில்லை. உடம்பினை உயிர்வேண்டாத இடத்துப் பிறவி யில்லை. பிறவியில்லா விட்டால் துன்பம் இல்லை. துன்பம் இல்லாத போது இன்பம் நிலைக்கும். ஆத லால் உயிர் கடவுளை வழிபட்டு அவரது திருவருளைப் பெறுவதற்கு முயலுதல் வேண்டும்.

# ௩. உலகம்

இந்த உலகமானது உயிருள்ள பொருள்களும், உயிரில்லாத பொருள்களும் கலந்துள்ள ஓர் பெரிய இடம். [உயிர்களின் கூட்டத்தையே உலகமென்று சொல்லுவதுமுண்டு. அவ்வாறே உயிரில்லாத பொருளின் தொகுதியையும் உலகம் என்று சொல்லலாம்.] உயிர்கள் வாழுதற்கு இடம் உடம்பு. உடம்பு நிலைப்பதற்கு இடம் உலகம். உயிரில்லாத பொருட்பிண்டமாகிய உலகம் யாவும் உயிருள்ளவற்றிற்குப் பயன் தரும் பொருட்டே தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன.

உடம்போடுள்ள உயிர்களை உடம்பென்று சொல்லாமல் உயிரென்றே சொல்லுகின்றார்கள். உடம்பு பல வகைப்படும். உயிரில்லை என்று எண்ணக்கூடிய கல்லினுள்ளும் தேரை என்கின்ற ஓர் சிற்றுயிர் காணப்படுகின்றது. நிலத்திலும், நீரிலும், காற்றிலும் எத்தனையோ கண்ணுக்குத் தெரியாத சிற்றுயிர்கள் வாழ்வதாகக் கற்றவர்கள் சொல்லுகின்றார்கள்.

இந்த நில உலகமானது உருண்டையாக இருக்கின்றது. இது ஞாயிற்றினைச் சுற்றி வருகின்றது. இந்த உலகத்தைப்போல உருண்டை வடிவுடைய பல மண்டிலங்கள் ஞாயிற்றினைச் சுற்றி வருகின்றன. ஞாயிறுதானும் பெரிய ஒருமண்டிலமாய்த் தன்னைச் சூழ்ந்த மற்ற மண்டிலங்களுக்கு ஒளி தருவதாய் இருக்கின்றது. திங்கள் நமது உலகத்தைச் சுற்றி

வருகின்ற மண்டிலம். அதற்குத் துணை மண்டிலங்களு முண்டு. ஞாயிறும் அதனைச் சூழ்ந்து வருகின்ற மண்டிலங்கள் யாவும், அவற்றின் துணை மண்டிலங்களும் ஓர் பெரிய படைப்பு வகுப்பாகக் காணப்படுகின்றன. அதுவே நமது காட்சிக்கு உட்பட்ட 'அண்டப்பகுதி என்னலாம். இப்படிப்பட்ட பகுதிகள் பல சேர்ந்து ஓர் பெரிய அண்டம் ஆகின்றது. அண்டத்தின் பகுதி ஒவ்வொன்றும் உருண்டை வடிவமுடையது. இதனாலே 'அண்டப் பகுதியின் உண்டைப்பிறக்கம்' என்றார் **மணிவாசகப் பெருமானார்.** அண்ட மென்பதே முட்டைபோன்ற அமைப்பு உடையதாகத் தோன்றுகிறது. இப்படி எண்ணில்லாத அண்ட கோடிகள் கடவுளுடைய திருமுன்பாக ஆடிக்கொண் டிருக்கின்றன. அவைகள் கடவுள் முன் பலகணி வழியாக வருகின்ற ஞாயிற்றின் ஒளியிலே தோன்றும் அணுக்கள் போன்று உலாவுகின்றன. வானத்திலே நுட்பமாகத் தோன்றுகின்ற உடுக்களின் (விண் மீன்கள்) தொகுதி பலவும் அண்டப் பகுதிகளாயிருக்கலாம். ஆகவே இப்படிப்பட்ட அண்டங்களெல்லாம் கூடிய பேருலகமானது நம்மால் அளவிடப்படாததாய்த் தலைவனது எல்லையில்லாத ஆற்றலையும் திருவருளையுங் காட்டிக்கொண்டு நமது சிறுமையையும் அவனது பெருமையையும் விளக்கி அவனிடத்தில் அன்பையும் பணிவையும் விளைக்கின்றது.

கடவுளுடைய பெருமையை இவ்வுலகத்தைப் பார்த்தாவது நாம் உணர்ந்துகொள்ளுவதில்லை. நமது நிலவுலகத்திலேயே மிகுந்த கடலையும், உயர்ந்த மலையை

யும், பெருமையும் அழகு முடைய ஆறுகளையும், சோலைகளையும் பார்த்தால் அவற்றைப் படைத்த கடவுளுடைய நினைவு நமக்கு வரவேண்டும். புலி, கரடி முதலிய கொடிய விலங்குகளையும், மான் முதலிய எளிய விலங்குகளையும் படைத்தவர் கடவுளே. கண்ணைக் கவர்கின்ற அழகுடைய மயிலும், காதிற்கு இசையோடு கூவுகின்ற குயிலும் கடவுளுடைய படைப்பின் பேராற்றலை எளிதில் உணர்த்துகின்றனவன்றோ ?

எல்லா வளமும் நிறைந்த இந்த உலகம் ஒரு காலத்திலே தோன்றி ஒரு காலத்திலே அழியும் இயல்புடையது. இவ்வுலகத்தின் பகுதியாகிய நம்முடைய உடம்போ இன்ன நேரத்தில் நம்மை விட்டு நீங்குமென்று சொல்லமுடியாது. உடம்பு நீங்கினால் உயிர் எங்கே செல்லும் என்று சொல்லமுடியாது. உடம்பு உள்ளபோதே இளமையில் நுகருவது வேறு; முதுமையில் நுகருவது வேறு; இந்த உலகத்திலே நாம் உடம்பை எடுத்ததினாலேதான் நம் மனைவி, மக்கள், உற்றார் பெற்றார் முதலியவர்களோடு நமக்குத் தொடர்பு ஏற்படுகின்றது. உடம்பு நீங்கினால் இந்தத் தொடர்பு எப்படியாகுமோ தெரியாது. ஆதலால் இந்தத் தொடர்பிலே அளவுக்கு மிகுந்த பற்றுவைத்து வாழ்நாளை வீண்நாள் ஆக்குதல் கூடாது. உலகம் நிலையாததென்று உணரவேண்டும். உணர்ந்து உலக முதல்வனாகிய கடவுளுடைய திருவடிகளைத் தொழுது அவனுடைய திருவருளினாலே நிலைத்த இன்பத்தைப் பெற நாம் முயலவேண்டும்.

# ௨. உலகப் பகுப்பு

## முதற் பாகம்

நமது உலகமானது உருண்டை வடிவாய் ஞாயிற்றின் மண்டிலத்தினின்றும் ஒன்பது கோடியே இருபது நூறாயிரம் (9,20,00,000) மைலுக்கு இப்பால் இருபத்தையாயிரம் மைல் சுற்றளவுள்ளதாய்த் தன் னடுவில் ஒரு புறத்திலிருந்து எதிர்ப் புறத்துக்குச் சுமார் ஏழாயிரம் மைல் தூரம் உள்ளதாய் ஒவ்வொரு நாளும் விநாடிக்கு (செக்கண்டு) ஆயிரம் மைல் வீதம் தன்னைச் சுற்றிக் கொண்டு ஓராண்டில் ஞாயிற்று மண்டிலத்தை ஒருமுறை சுற்றுவதாய் உள்ள ஒரு பிண்டம். இத்தகைய பூமண்டிலம் சூரிய மண்டிலத்தின் பதின்மூன்று இலட்சம் பங்கில் ஒரு பங்கு அளவுதான் உள்ளது. நமது பழைய சமய நூல்களில் கூறப்பட்ட பரத கண்டமும் மிலேச்சர் தீவுகளும் ஒருபங்கு சேர்ந்துள்ள பாகமே இப்போது நமது காட்சியுட்பட்ட நில வுருண்டையாகும். இதனை மதி சுற்றி வருகிறது. பூமியின் முப்பதிலொரு பங்குதான் **மதி மண்டிலத்தின் அளவு.** அஃது இங்கிருந்து சுமார் இரண்டு லட்சத்து நாற்பதினாயிரம் மைலுக்கு அப்பாலுள்ளது. அதற்கும் அப்பாலுள்ளது சுக்கிர மண்டிலம், அது பூமியைப் போல் சூரியனைச் சுற்றி ஓடுகின்றது. அதற்கப்பால் உள்ளது புதன் மண்டிலம். அதுவும் சூரியனைச் சுற்றியே ஓடு

கின்றது. புதன் சுக்கிரன் என்னும் இரண்டு மண்டிலங்களைப் பார்க்கிலும் பூமி சூரியனிலிருந்து மிக்க சேய்மையிலுள்ளது. செவ்வாய் மண்டிலமும் வியாழ மண்டிலமும் பூமியைப் பார்க்கிலும் அதிக தூரத்திலுள்ளன. வியாழ மண்டிலம் பூமியைப் பார்க்கிலும் சுமார் ஆயிரத்து நானூறு பங்கு பெரியது. அது சூரியனைச் சுற்றி வரப் பன்னிரண்டு ஆண்டுகளாகின்றன. அதற்கும் அதிக தூரத்தில் இன்னும் இரண்டு கிரகங்களிருப்பதாக மேலை நாட்டு **வான நூல் வல்லார்** கூறுகின்றார்கள்.

பூமி சூரியனை ஒருமுறை சுற்றி வருகின்ற தூரம் ஐம்பத்தெட்டுக் கோடி மைலாகும். பூமியின் வழி வட்டமாக இராமல் முட்டையின் சுற்றளவுபோல் இருக்கின்றது. அவ்வழி பன்னிரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பாகத்திலும் பூமி செல்லும்போது அதற்கு நேராகவுள்ள ஞாயிற்றின் அருகிலே வானத்தில் ஓர் உடுத்தொகுதி காணப்படும். அதனை இராசி என்பார்கள். பன்னிரண்டு மாதத்திற்கும் பன்னிரண்டு இராசிகள் உள்ளன. அவ்வாறே பூமியைச் சந்திரன் சுமார் இருபத்தேழு நாட்களுக்குள் ஒரு முறை சுற்றுகின்றது. சந்திரவீதி இருபத்தேழு பகுதியாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதிக்கும் நேராக ஒவ்வொரு நட்சத்திரம் உள்ளது. இருபத்தேழு நட்சத்திரங்களையும் சிறந்த விண்மீன்களாக நம்மவர்கள் கருதுகின்றார்கள். அவைகள் சந்திர வீதியிலுள்ளது பற்றி அவற்

றைச் சந்திரனது மனைவியாகக் கூறுவது வழக்கம். பூமி சந்திரனுக்கும் சூரியனுக்கும் நடுவே சென்று சூரிய ஒளியைத் தடுக்குங்கால் சூரிய கிரகணமும் சந்திரன் மற்றிரண்டிற்கும் நடுவே வந்தபோது சந்திர கிரகணமும் உண்டாகின்றன. திங்களின் மேற்படும் பூமி நிழலைக் **கேது** வென்றும் ஞாயிற்றின் மேற்படும் திங்கள் நிழலை **இராகு** வென்றும் இந் நாட்டு வான நூலார் கருதுகின்றார்கள்.

வானத்தில் அளவில்லாத உடுக்கள் தோன்றுகின்றன. பகற் காலத்தில் சூரியன் ஒளியுள் அவற்றின் ஒளி மூழ்கி விடுகின்றது. அவற்றுள் சிலவற்றையே நம்மவர்கள் பெயரிட்டழைப்பது வழக்கம். சூரிய மண்டிலத்தையும் சூரியனைச் சுற்றியோடுங் கிரகங்களையும் அக்கிரகங்களைச் சுற்றி யோடும் சந்திரர்களையும் இவற்றின் வழிகளுக்கு அருகிலுள்ள உடுக்களையுமே நம் சோதிட நூலார் கவனிப்பார்கள். சூரிய மண்டிலம் இன்னும் பலகோடி மைல்களுக்கு அப்பாலிருந்தால் அதுவும் ஒரு நட்சத்திரம் போலவே தோன்றும். சூரியனைப் போலவும் அதனைப் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு பெரியதாகவும் உள்ள ஒளி மண்டிலங்கள் வெகு தூரத்தி லிருப்பதால் அவை நமக்குச் சிறு நட்சத்திரங்களாகத் தோன்றுகின்றன.

சூரியனும் தன்னைச் சுற்றிக்கொள்ளுகிறான். அது போலத் தம்மையே சுற்றிக்கொண்டு ஓர் நிலையில் நிற்கும் நட்சத்திரங்களும் உள்ளன. பிறவற்றைச் சூழ்ந்து

செல்லும் விண்மீன்களும் இருக்கின்றன. இன்னும் தாமே ஒளி மூலமாக விளங்குகின்ற உடுக்களும், பிற வற்றினின்று தம் மொளியைக் கடன் வாங்கிக் கொள்ளுகின்ற விண் மீன்களும் உண்டு. சுக்கிரமண் டிலத்தி லிருந்து பூமியைப் பார்த்தால் பூமியும் ஒரு ஒளி யுடைய கிரகமாகவே தோன்றும். சூரியனும் அதன் சுற்றமுங் கூடிய பெருந்தொகுப்பைப் போல எண்ணி லாத தொகுப்புக்கள் வானிலே நிலவுகின்றன என்று பெரியோர்கள் கூறுகின்றார்கள். ஒவ்வொரு பெருந் தொகுப்பையும் அதன் சார்பாய் உள்ளனவாய் நமது காட்சிக்கு அப்பாற்பட்டனவா யிருக்கின்ற புவனங் களையும் ஒவ்வோர் அண்டமாகக் கருதினால் எண்ணில் லாத அண்டங்கள் கடவுள் திருமுன்பாக ஆடிக் கொண்டிருக்கின்றன. நிலமுதலினுள்ள (பிருதிவி தத் துவம்) அண்டங்கள் ஆயிரங்கோடி எனவும் அத் தத் துவத்திற்கு மேற்பட்ட தத்துவங்களில் அண்டத் தொகை பதின்மடங்காகவும் நூறு மடங்காகவும் ஆயி ரம் மடங்காகவும் அதற்கதிகமாகவும் விரிகின்றதென்று அறிவன் நூல் கூறுகின்றது. இவ்வண்டங்களெல்லாம் ஒன்றனை யொன்று கவரும் பெரும் சக்தியினால் கட் டுண்டு திருவருளே தாரகமாக அந்தரத்தே நிலவுகின் றன. ஆதலினாலன்றோ **தாயுமானாரும்** 'அந்தரத் தகில கோடி தாழாமல் நிலைநிற்க விலையோ' என்றருளிச் செய்ததுமென்க.

அவற்றின் 'அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி'யை ஆராய்ச்சி செய்ய நம்மால் இயலுமோ?

இந் நிலவுலகப் பரப்பையும் ஆண்டு வதியும் உயிர்களை யும்பற்றி ஒரு சிறிது ஆய்வாம். இவ்வுலகமானது, முக் காற் பங்கு கடலும் ஒரு பங்கு நிலமுமாக இருக்கின் றது. நிலத்தைச் சுற்றிக் கடலிருப்பதால் நிலப்பகுதி முழுவதும் ஓர் தீவுபோன்றிருக்கின்றது. 'பூமி உருண் டையின் மேற்பாகமே நமது நானிலம். அதன் ஒரு பாதியிலுள்ள நிலத்தை **ஆசியா, ஐரோப்பா, ஆஸ்திரே லியா, ஆப்பிரிக்கா** என்னும் கண்டங்களாகவும், மற் றொரு பாதியிலுள்ள நிலத்தை **வட அமெரிக்கா, தென் அமெரிக்கா** என்னும் கண்டங்களாகவும் மேலை நாட் டுப் புலவர் பகுத்திருக்கின்றார்கள். நமது **இந்தியா,** ஆசியாக் கண்டத்தின் தென்பாகத்துள்ள நாடுக ளின் நடுவண் முப்புறங் கடல் சூழ்ந்துள்ள பெரு நாடாகும்.

## இரண்டாம் பாகம்

நமது **இந்திய நாடு,** வடக்கில் **இமயமலை**யையும் தெற்கில் **குமரிமுனை**யையும் உடையது. குமரிக்கும் தென்பால் ஒரு பெருமலைத் தொடரும் சில பேராறு களும் உடைத்தாயிருந்த தமிழ் நாட்டின் பெரும்பகுதி இருமுறை கடல் கொள்ளப்பட்டொழிந்தது. தெற்கே **பொதிய**மும் வடக்கே **விந்திய**முமுடைய தென் இந் திய நாடு உலகந் தோன்றிய நாட்டொட்டு அழியாது நிலவுகின்றது என்ற கொள்கையு முண்டு. இமயமலை அடிவாரத்தில் கடற்சிப்பி முதலியன காணப்படுத லால், ஒரு காலத்தில் இமயமலை உள்ள இடம் கடலா

யிருத்தல் கூடுமென்று சிலநூல் வல்லார் கருதுகின்றார்கள்.

இந்நாட்டின் வடகோடியிலுள்ள நாடு **காசமீர்.** அதற்கு மேற்கில் மகமதியர் நாடாகிய **ஆப்கானிஸ்தான், பெலுசிஸ்தான்** என்பன உள்ளன. அதற்கு வடக்கு **பாரசீகநாடு.** அதற்குக் கிழக்கே ஐரோப்பா முழுவதையும் தன்னுள் அடக்கவல்ல **சீனமாநாடு.** இந் நாட்டிற்குத் தெற்காகவும், இந்தியாவிற்குக் கிழக்காகவும், **கடாரம்** என்று பண்டைத் தமிழர் விளித்த **பர்மா** தேசமுள்ளது. அதற்குக் கிழக்கு **சீயநாடு.** தெற்கு **மலையநாடு.** சீனமாப் பெருநாட்டிற்கு வடக்கேயுள்ள பெருந்தேயம் **ஆசியரசியா.** அதற்கு வடக்கு **வடபெருங்கடல்.** ஆசியரசியாவுக்கும் சீனதேசத்திற்கும் சீயமலையநாடுகளுக்கும் கிழக்காக உள்ள பெருங் கடல் **சாந்தமா** சமுத்திரம் எனப்படும். இப்பெருங்கடலின் தென்பாகத்தில் **ஜாவகம், சுமத்திரா, பார்னியூ** முதலிய தீவுகளும், அவற்றிற்கும் தெற்கே ஆஸ்திரேலியாக் கண்டமாகிய பெருந்தீவும் உள்ளன. சாந்தமகா சமுத்திரத்தின் நடுவே சீனதேசத்திற்குக் கிழக்கே ஜப்பான் தீவுகள் உள்ளன.

இந்தியாவுக்கு மேல்புறமுள்ள ஆப்கானிஸ்தான் பெலுசிஸ்தான் பாரசீகம் என்ற நாட்டிற்கு மேற்கே ஒரு கடல் வளைவு உண்டு. அதற்கப்பால் மகமதிய மதம் உண்டான **அராபிய** தேசமும், அதற்கு வடக்கே

கிறித்துமத முண்டான மெசப்படோமியா, பாலஸ்தீன் முதலிய நாடுகளும் அதற்கும் மேற்கே துலுக்கர் அரசு செய்யும் **ஆசிய துருக்கி**யும் உள்ளன. பாரசீக நாட்டிற்கு நேர் வடக்கே உள்ளது **துருக்கிஸ்தானம்** என்னும் இடம் சீனர்களுக்கு ஒரு பகுதியும் எஞ்சியது ருசியருக்குமாகச் சொந்தமானது. அதற்கு வடக்கே ஆசியரசியா வடசமுத்திரம் வரை யுள்ளது. அதற்கு மேற்கே ஐரோப்பிய ரசியா என்னும் பெருநா டுள்ளது. ஆசிய ரசியாவுக்கும் ஐரோப்பிய ரசியாவுக்கும் இடையிலே ஊரல் மலைத்தொடரும் காசிபீயன் உட்கடலும் உள்ளன. இவற்றிற்கு மேற்கே ஐரோப்பிய ரசியாவிற்குத் தென்பாகத்தில் ஆசிய துருக்கி யுள்ளது. இரண்டிற்கும் நடுவே **கருங்கட**லும் காக்கேசிய மலைத்தொடரு மிருக்கின்றன. கருங் கடலுக்கு மேல்புறம் ஆசிய துருக்கியினின்றும் கடற் சந்தி ஒன்றால் பிரிக்கப்பட்ட ஐரோப்பிய துருக்கி யிருக்கின்றது. ஆசிய துருக்கிக்கும் ஐரோப்பிய துருக்கிக்கும் மேற்கே **கிரீக்கு** தேசமிருக்கின்றது. கிரீக் தேசத்திற்கும் ஆசிய துருக்கி தேசத்திற்கும் இடை நடுவே **அயோனியன்** கடல் வளைவு உண்டு.

ஆசியாக் கண்டத்திற்கு மேற்கே ஐரோப்பாக் கண்டமும் அதன் தென்பாகத்தில் ஆப்பிரிக்காக் கண்டமும் இருக்கின்றன. ஆப்பிரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கு மிடையில் மத்தியதரைக்கடல் உள்ளது. அஃது அராபியாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் நடுவில்

உள்ள செங்கடலோடு சூயஸ் வாய்க்காலினல் சேர்க்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாக் கண்டத்தில் அதன் தென்பாகமே பண்டைக்காலத்தில் மிக்க நாகரிகம் உடையதா யிருந்தது. மத்தியதரைக் கடலுள் நீண்டுள்ள **கிரீக்** தேசமும் **இட்டாலியா** தேசமும் ஆதியில் பேரரசுக்கு நிலைக்களமாக இருந்தன. இட்டாலிக்கு மேற்கேயுள்ள **ஸ்பெயின்** தேசமும் **போர்ச்சுக்கல்** தேசமும் ஒரு காலத்தில் மிக்க அதிகார முடையனவா யிருந்தன. சுமார் அறுநூறு வருடத்திற்கு முன்னே ஸ்பெயின் தேசத்தைத் சேர்ந்த **கொலம்பஸ்** என்பவர் **அமெரிக்காவை** முதல் முதல் கண்டுபிடித்தார். போர்ச்சுக்கல் தேசுத்து **வாஸ்கோடிகாமா** என்பவர் 1492-ஆம் வருடத்தில் இந்தியாவின் மேலக்கரைக்கு ஆப்பிரிக்காவைச் சுற்றி வழிகண்டு பிடித்தார்.

கிரீக் தேசத்திற்கு வடக்கே **ஆஸ்டிரிய அங்கரியும்,** இட்டாலியா தேசத்திற்கு வடக்கே **சிவிட்ஸர்லேண்டும்,** ஸ்பெயின் தேசத்திற்கு வடக்கே **பிரஞ்சு** தேசமும் உள்ளன. **பிரஞ்சு** தேசத்திற்கு வடக்கே **ஜெர்மன்** தேசமும் **ஆலண்டு பெல்ஜியம்** என்னும் சிறு நாடுகளும் உள்ளன. ஜெர்மன் தேசத்துக்கு வடமுனையில் **டென்மார்க்கு** என்னும் ஒடுங்கிய நாடுள்ளது. ஜெர்மனிக்கும் ஆஸ்டிரிய அங்கரிக்கும் வடக்கே ஐரோப்பாவின் பெரும்பாகம் வடசமுத்திரம் வரையில் **ரசியா**வேயுள்ளது. அதற்கு மேல் பாகம் பால்

டிக் கடலினால் பிரிக்கப்பட்ட **நார்வே, ஸ்காண்டி நேவியா** என்னும் நாடுகள் உள்ளன. ஐரோப்பாக் கண்டத்திற்கும் ஆப்பிரிக்காக்கண்டத்திற்கும் மேற்கே உள்ள பெருங்கடல் **அத்லாண்டிக்** சமுத்திரம் என்று சொல்லப்படும். இக்கடலின்கண் பிரஞ்சு தேசத்தி லிருந்து சிறு கடற் சந்தியால் பிரிக்கப்பட்டு ஆசியா வில் ஜப்பான்போல ஐரோப்பாவின் மேலைக்கடல் நடுவண் நம்மையாளும் ஆங்கில அரசரது நிலைக்களமாகிய **பிரிட்டன்** தீவுகள் உள்ளன. அவை மூன்று பகுதிப்படும். **இங்கிலாந்தும்** அதற்கு வடக்கேயுள்ள **ஸ்காட்லாண்டும்,** இரண்டிற்கும் மேற்கில் தனித் தீவாக **அயர்லாண்டும்** ஆகும்.

ஆப்பிரிக்காக் கண்டமானது வடக்கே மத்திய தரைக்கடலையும், கிழக்கே சூயஸ்கால்வாய், செங்கடல், அரபிக்கடல் என்பனவற்றையும், தெற்கிலும் தென் கிழக்கிலும் இந்துமகா சமுத்திரத்தையும், மேற்கில் அத்லாண்டிக் மகா சமுத்திரத்தையும் எல்லையாகவுடையது. இக்கண்டத்தின் வடமேற்குப் பாகத்தில் உள்ள **எகிப்து** நாடானது மிக்க பழமையான நாகரிகத்தையுடையது. அவ்வாறே மத்தியதரைக் கடலைச் சார்ந்துள்ள வடபாகங்கள் பண்டை நாகரிகத்திற்குப் பேர் போனவை. எகிப்துக்கு மேற்கே இந்தியாவினும் இருமடங்கு பெரிதான **சகாரா** என்னும் பெரிய பாலைவனம் உள்ளது. ஆப்பிரிக்கா மிகுதியும் சூடுள்ள பூமியாகவும் மிலேச்சர்கள் வதிவதாயு முள்ளது.

அதன் பெரும்பாகங்களை ஆங்கிலரும் ஜெர்மனியரும் பிரஞ்சு தேசத்தாரும் கைப்பற்றிக்கொண்டனர். இக் கண்டத்தின் தென்பாகத்தில் **கேப் காலனி, நேட்டால்** முதலிய ஆங்கிலரது ஆட்சிக்குட்பட்ட நாடுகள் உள்ளன. இங்கே தங்கச் சுரங்கங்களும் வயிரச் சுரங்கங்களும் இருக்கின்றன. ஆசியா ஐரோப்பா ஆப்பிரிக்கா என்னும் கண்டங்கள் பூமி உருண்டையில் ஒரு பாதியிலும், வட அமெரிக்காவும் தென் அமெரிக்காவும் மற்றொரு பாதியிலு மிருக்கின்றன. இருநிலப்பரப்பிற்கும் நடுவே மேலைப் பாகத்தில் அத்லாண்டிக் மகா சமுத்திரமும் கீழைப்பாகத்தில் சாந்த மகா சமுத்திரமும் இருக்கின்றன. எல்லாக் கண்டங்களுக்கும் வடக்கே **ஆர்ட்டிக்** சமுத்திரம் என்னும் வடசமுத்திரமும் எல்லாக் கண்டங்களுக்கும் தெற்கே **அண்டார்ட்டிக்** என்னும் தென் கடலும் பூமியின் வடமுனை தென் முனைகளில் உள்ளன. தென் சமுத்திரத்திற்கு வடக்கே இந்தியா முதலிய தென் ஆசிய நாடுகளுக்குத் தெற்கே உள்ள சமுத்திரம் **இந்துமகா** சமுத்திரம் என்றழைக்கப்படும்.

பூமியுருண்டை மேற்கேயிருந்து கிழக்காகத் தன்னைச் சுற்றுங்கால் அதன் ஒருபாதியே சூரியனை நோக்கி யிருக்கும். ஆதலினால் ஆசியாக் கண்டத்திலுள்ள நமக்குப் பகலாக இருக்கும்போது அமெரிக்காக் கண்டத்திலுள்ளவர்களுக்கு இரவாக இருக்கும். சூரியன் பூமியைச் சுற்றுகின்றது என்ற கொள்கை

யுடையவர்கள் அமெரிக்காக் கண்டத்தை நமக்குக் கீழ்ப்பூமி என்பார்கள்.

பூமி சூரியனைச் சுற்றி ஓடுங்காலத்து ஆறுமாதம் வடமுனையைச் சூரியனுக்கு எதிரே சாய்த்தும் மற்றும் ஆறுமாதம் தென் முனையை அவ்வாறு சாய்த்தும் ஓடுவதால் வட முனையிலும் தென் முனையிலும் வருடத்தில் ஆறுமாதம் ஒளியும் ஆறுமாதம் இருட்டும் உண்டு. அங்கே உள்ளவர்களுக்கு தேவருலகிற் போல நீண்ட ஒரு பகலும் நீண்ட ஓர் இரவுமே உண்டு. ஆனால் சூரியன் தலைக்குநேராக வருதல் அரிது. பூமியினது நடுப்பாகம் ஞாயிற்றின் கதிர்களுக்கு நேரேயிருப்பதால் அங்கேயுள்ள தேசங்களில் அதிக வெப்பமும் அப்பாகத்திற்கு வடக்கே செல்லச்செல்லக் குறைந்த சூடும் மிகுந்த குளிரும் இருத்தலினாலே, அவ்வவ்விடங்களின் தட்ப வெப்பநிலை வேறுபடும். ஆப்பிரிக்காக் கண்டத்தின் பெரும்பாகம் சூரியனுக்கு நேரேயுள்ள சூட்டுவளையில் உள்ளது. இந்தியாவின் தென்பாதியும் அவ்வாறே. ஐரோப்பாவின் பெரும்பாகமும் சைனா ஜப்பான் முதலிய இடங்களும் சூடும் குளிரும் நடுநிலையாகவுள்ள பாகத்தில் உள்ளன. ரஷியா முதலிய இடங்கள் வட முனைக்குச் சமீபமாயிருத்தலால் குளிர் மிகுந்து பனிக் கட்டியினால் பலநாள் மூடப்பட்டுள்ளன. தென் சமுத்திரத்தில் மக்கள் வாழும் தீவுகள் மிகுதியாயில்லை.

ஒவ்வொரு கண்டத்திலும் பலபல மலைகளும் நதி-

களும் நகரங்களும் சிற்றூர்களும் விளைபொருள்களும் அரசாங்கங்களும் உள்ளன. இந்தியாவின் வடகிழக் கெல்லையாக உள்ள மலைத்தொடர் **இமயமலை**யாகும். அதன் உயர்ந்த கொடுமுடி ஐந்துமைல் உயரமுள்ளது. வட அமெரிக்காவிலுள்ள பெருமலைத் தொடர் **இராக்கி** மலைத்தொடராகும். தென் அமெரிக்காவிலுள்ள **ஆண்டெஸ்** மலைத்தொடர் உலகத்திலே மிக்க நீண்ட தொட ரென்ப. அது நாலரைமைல் உயரம் உள்ள கொடுமுடியை உடையதாகவும் வெள்ளிச் சுரங்கங்களை உடைய தாகவும் கூறப்படுகிறது. அம்மலையில் உற்பத்தியாகிச் செல்லுகிற **அமேசான்** என்னும் பெரு நதியானது கடலிற் சேருமிடத்து சுமார் நூறுமைல் அகலம் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. வட அமெரிக்காவிலுள்ள **மிசோரிமிசிசிப்பி** நதியானது சுமார் நாலாயிரம் மைல் நீளமுள்ளதாய் உலகத்திலுள்ள நதிகளிலெல்லாம் மிக்க நீளமுள்ளதாய்க் கருதப்படுகிறது. ஆப்பிரிக்காவில் எகிப்துதேசத்தில் உள்ள **நீலநதியின்** நீளம் மூவாயிரம் மைலுக்கு மேற்பட்டது. சைனதேசத்தில் இரண்டு பெருநதிகள் இரண்டாயிரம் மைலுக்கு மேற்பட்ட நீளமுடையன.

இந்தியாவில் **கங்கை, சிந்து, பிரமபுத்திரா** என்ற மூன்று நதிகளும் பெரு நதிகள். அவற்றுள் மிக்க நீளமானது **சிந்து** நதி. அஃது இரண்டாயிரம் மைல் நீள முள்ளது. கங்கையின் நீளம் சுமார் ஆயிரத்தைந் நூறு மைல். மற்ற விவரங்கள் விரிக்கிற் பெருகும்.

உலகத்தில் வாழும் மக்களை உடல் அமைப்பு வேறுபாடுகாரணமாகச் சில பெருவகுப்புகளாக மேலை நாட்டுப் புலவர் பிரித்துள்ளார்கள். ஐரோப்பியர்களும் இந்தியர்களும் காக்கேசிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சீனரும் ஜப்பானியரும் மஞ்சள்நிறமும் தட்டை மூக்குமுடைய மங்கோலியர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆப்பிரிக்காவிலுள்ள நீகிரோ வகுப்பார் மிக்க கருநிறமும் தடித்த உதடும் கனத்த உரோமமும் உடையவர்கள். அமெரிக்கா தேசத்திலுள்ள மிலேச்சர்கள் சிறிது செந்நிறமுடையவர்கள். இப்பெரும் பிரிவுகளில் உட்பிரிவுகள் பல. அவை விரிக்கிற் பெருகும். இந்தியாவிலுள்ளவர்கள் **ஆரியர், திராவிடர், நாகர்** என்று முத்திறத்தராகக் கருதப்படுகின்றார்கள். ஏனை விவரம் சிறப்பு நூல்களுட் கண்டுகொள்க.

# ௫. சமயம்

உயிர்க்கு உறுதிதரும் நல்வழி எது என்று ஆராயும் முயற்சி உலகமெங்கும் காணப்படும். அவ்வகையான முயற்சிசெய்து யாதாவது ஒரு முடிவுக்கு வந்தவர் சிலர். அவர்குறித்த வழியில் நின்றவர் பலர். வழிகுறித்தவரைச் சமயத்தலைவரென்றும், வழிநிற்பவரைச் சமயத்தாரென்றுங் கூறலாம். சமயங்கள் பலவாயினும் சிலவே நன்றாக விளங்குவன. நாகரிகமுடைய மக்கள் வசிக்கின்ற உலகத்தில் வழங்கும் சமயங்களை **கிறிஸ்துமதம், மகமதியமதம், புத்தமதம், இந்துமதம்** என்னும் நான்குபெருஞ் சமயங்களுள் அடக்கலாம். ஐரோப்பாவிலும், ஐரோப்பியர் வாழும் அமெரிக்காவின் பகுதிகளிலும் கிறிஸ்துமதமானது பெரும்பான்மையும், மற்ற இடங்களில் சிறுபான்மையும் நிலவிநிற்கின்றது. அரேபியா, துருக்கி, ஆப்கனிஸ்தான், பெலுசிஸ்தான் என்னும் நாடுகளிலும் இந்தியாவின் சில பகுதிகளிலும் மகமதியமதம் நிலவுகின்றது. சீனம், ஜப்பான்முதலிய நாடுகளில் புத்தமதம் பரவி யிருக்கின்றது. பாரசீக தேசத்தின் பழங்குடிகள் **சொராஸ்டர்** என்பவராலே நாட்டப்பட்ட ஒரு சமயத்தைக் கைக்கொண்டொழுகுகின்றார்கள். சீன தேசத்தில் புத்தமதம் பரவுவதற்கு முன்னேயே கான்பூசியஸ் (Confucius) என்பவரால் ஏற்படுத்தப்பட்ட முன்னோர் வணக்கம் வழக்கத்திலிருந்தது. இந்தியாவிலே புத்த சமயத்தோடு பெரும்

பான்மையும் ஒத்த **சமணசமயம்** இந்திய நாடெங்கும் ஒருகாலத்திற் பரவியிருந்தது. இப்போது அது பம்பாய் மாகாணத்தின் சில பகுதிகளில்தான் சிறந்துவழங்குகின்றது.

இந்தியாவில் மட்டும் **இந்துமதம்** என்ற பெயராலே சில சமயங்கள் நிலைத்திருக்கின்றன. இந்துமதம் என்று ஒரு தனி மதங் கிடையாது. இந்திய நாட்டுக் குடிகள் யாவரும் இந்துக்கள் என்றுசொல்லப்படுகின்றார்கள். அவர்கள் யாவர்க்கும் சில வழக்கங்களும், சில கொள்கைகளும் பொதுவா யிருத்தலினாலே அவர்கள் யாவரும் ஒரு பெரிய மதத்தைச் சார்ந்தவரென்று மேலைத்தேசத்தார் கருதினமையால் அவர்கள் இந்து தேசத்தார் மதம் **இந்துமதம்** என்ற கருத்தைநிலைநாட்டிவிட்டனர். ஆனால் அது திட்பமான கருத்தன்று. **கடவுள், உயிர், உலகம்** என்றவற்றைப்பற்றி ஒரே வகையான கருத்துக்கள் இந்துமத மென்பதிலில்லை. மறுபிறப்பு உண்டு, உயிர்க்கொலைசெய்தல் மிக்க நல்லதன்று. பசுவானதுபோற்றத்தக்கது என்கின்ற கருத்துக்கள் மாத்திரம், இந்த நாட்டிலேயுள்ள **சைவம் வைணவம், சுமார்த்தம், மாத்வம், சமணம், புத்தம்** முதலிய எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானகொள்கைகளாக இருக்கின்றன. இவைகளுள் முதல் நான்கும் **இந்துமதம்** என்ற பெயரால் வழங்கப் பெறுகின்றன. இந்நான்கினுள்ளுஞ் சமயத்திற்குரிய கடவுளைப்பற்றிய கொள்கை வெவ்வேறு. உலகத்தையும்

உயிரைப் பற்றிய கொள்கையும் மவ்வாறே. ஆதலால் இந்த நான்கும் வெவ்வேறு சமயங்கள்என்று கொள்வதே தக்கது. மேலும் ஒரு சமயத்திற்குப் பெயர் அச் சமயத்தின் கடவுள், தலைவர், நூல் என்பவற்றின் யாதாவது ஒன்றின்பெயரோடுதொடர்புடையதாகஇருத்தல் வழக்கு. சைவத்தில் வழிபடுங் கடவுளின் பெயர் **சிவன்** ஆதலால் அதற்கு அப்பெயர் வந்தது. **விஷ்ணுவை** (திருமால்) வழிபடுஞ் சமயம் **வைணவம்,** கிறிஸ்துவைத் தலைமையாக உடைய மதம் **கிறிஸ்துமதம்.** மகமது நபியைத் தலைமையாக உடைய மதம் **மகமதிய மதம்.** புத்தர் நாட்டிய மதம் **புத்த மதம். சமணம்** என்னும் சைன சமயத்திற்குத் தலைவர் **ஜினன்.** ஸ்ரீமத் துவாசாரியார் செய்த நூல்வழி நிற்பவர் **மாத்துவர்.** வேதத்தைத் தமது சமய நூலாகக் கருதுபவர் **வைதிகர்.** ஸ்மிருதி வழி ஒழுகுகின்றவர் **சுமார்த்தர்.** இவ்வாறு நோக்குமிடத்து **இந்துமத**மென்ற சொல் சமயத் தொடர்புடைய மொழியாகக் காணப்படவில்லை. வடமேற்கு இந்தியாவிலுள்ள சிந்து நதிக்கரையில் வசித்தவர்க்கு **சிந்துக்கள்** அல்லது **இந்துக்கள்** என்ற பெயர் முதலில் வழங்கிப் பின் இந்திய நாட்டுமக்கள் யாவரையும் குறிப்பதாயிற்று. நடையுடை பாவனைகளில் சிறுபான்மை ஒத்திருப்பதால் இந்நாட்டிலுள்ள வெவ்வேறு மதத்தினரும் இந்து சமயத்தாரென்று கூறப்படுவாராயினர். இந்தியநாட்டுச் சமயநூல்களில் **இந்துமத** மென்பது கேட்கப்படவேயில்லை. இந்துமத

மென்ற சொல் தங்கள் மதத்தையே குறிப்பதாக வைதிகர்களாகிய சுமார்த்தர் கூறுகின்றார்கள். அங்ஙனம் கூறிக்கொண்டு சைவம், வைணவம் முதலிய இந்நாட்டின் மற்றச் சமயங்கள் தமது மதங்கள் அடங்கிய ஒவ்வொரு பகுதிகளென்று கூறுகிறார்கள். அக்கருத்து அவ்வளவு திட்பமானதன்று என்பது பின் வரும் **அட்டவணை**யால் விளங்கும்.

## சமயங்களின்

| சமயம் | வழிபடுங் கடவுள் | தோத்திரம் | பிரவேசக் கிரியை | கிரியாகாண்டப் பிரமாண நூல் |
|---|---|---|---|---|
| ஸ்மார்த்தம் | சூரியனும் மும்மூர்த்திகளும் முக்கிய தெய்வங்கள். வேதத்திற் சொன்ன பல தெய்வங்களெல்லாம். | வடமொழி வேத மந்திரங்கள். | உபநயனம். | ஸ்மிருதிகளும் கல்ப சூத்திரங்களும். |
| வைஷ்ணவம் | மும்மூர்த்திகளில் ஒருவராகிய விஷ்ணுவே முதற் கடவுள், பிற தெய்வங்கள் அவர்க்குக் கீழ்ப்பட்டோர் | விஷ்ணு சம்பந்தமான வடமொழி வேத மந்திரங்களும் ஆழ்வார்களுடைய தமிழ் நாலாயிரப் பிரபந்தங்களும். | முத்திரா தாரணம் அல்லது சமாசிரயம் அதாவது (சங்கு சக்கர முத்திரை) தரித்தல். | பாஞ்சராத்திரம் வைகானசம் என்ற இரண்டு ஆகமங்களும், வடகலையார்க்கு அவற்றோடு சுருதிஸ்மிருதிகளும். |
| சைவம் | பரமசிவம் மும்மூர்த்திகளில் ஒருவராகிய உருத்திரனலலர். மும்மூர்த்திகளுக்குந் தலைவர். மற்றைத் தெய்வங்கள் அவருக்கு அடியாராயுள்ள ஆன்மாக்கள். | தேவார திருவாசக முதலிய அருட்பாக்கள். | சிவதீக்ஷை. | சிவாகமங்களும் பத்ததிகளும். |

# அட்டவணை

| தத்துவக் கொள்கைக்குப் பிரமாண நூல் | முக்கிய தத்துவக் கொள்கை | சமுதாயப் பக்கம் |
|---|---|---|
| பத்து உபநிடதங்களும், வியாசர் பிரமசூத்திரமும், பகவத் கீதையும் சங்கரபாஷியப்படி | ஏகாத்ம வாதம் - உண்மையில் பரப்பிரம்மத்தைத் தவிர வேறொன்றுமில்லையென்பது. | வருணாசிரம தருமம். |
| க. ஆழ்வார் பிரபந்தங்களின் வியாக்கியானங்கள். உ. சில உபநிடதங்களும், பிரமசூத்திரமும் பகவத்கீதை இராமாநுஜ பாஷியப்படி. | விசிஷ்டாத்வைதம் கடவுளுஞ் சீவனும் வெவ்வேறாயிருப்பினும் கடவுளுடைய வடிவத்தின் பகுதியாக உலகமும் ஆன்மாவும் உள்ளன வென்பது அவர் கொள்கை. | வடகலையார்க்கு வருணம் பிரதானம், தென்கலையார்க்கு வருணத்தினுஞ் சமயம் பிரதானம். |
| முக்கிய நூல் சிவஞானபோதம், அதைச் சார்ந்த சாத்திரங்கள். | முப்பொருளுண்மை கடவுள் (பதி) உயிர் (பசு) உலகமூலமாகிய மாயை (பாசம்) இம் மூன்றையுந் தொடர்புபடுத்தி நிற்பது கடவுளுடைய திருவருள் (அருட் சத்தி). | சமய வொழுக்கம் முக்கியம். வருணாசிரம தருமம் பிரதானமன்று. |

# நன்மை தீமை

கடவுள் உலகத்தைப் படைத்து அதில் எல்லா உயிர்களும் வாழுதற்கு வேண்டும் பொருள்கள் யாவற்றையும் அமைத்திருக்கின்றார். உயிர்களுக்குக் கடவுள் செய்கின்ற உதவி அவைகளுடைய நன்மைக்கேயல்லாமல் தனது நன்மைக்காக அன்று. தான் உயிர்களிடத்திலே யாதொன்றையும் வேண்டுவதில்லை. உயிர்கள் நல்ல நிலையை அடையவேண்டுமென்பதே அவருடைய திருவுள்ளக்கருத்து. தான் மற்றவர்களுக்கு நன்மை செய்வதுபோலவே ஒவ்வொரு உயிரும் பிறருக்கு நன்மைசெய்யவேண்டுமென்பது அவருடையகருத்து. ஆதலால் யாவர்க்கும் நன்மை செய்கின்றவர்களுக்கு அருளும், நன்மையுஞ் செய்யாது தீமைசெய்கின்றவர்களுக்குக் கண்டிப்பும் வைத்திருக்கின்றார்.

நாம் யாதொரு துயரமுமில்லாமல் நலமாகவே வாழ எண்ணுகின்றோம். அப்படியே மற்ற எந்த உயிரும் வாழவேண்டுமென்று எண்ணுவது நம்முடைய கடமை. ஓருயிர்க்கும் நாம் தீங்கு செய்தல்கூடாது. நமக்கும் பிறர்க்கும் நாம் நன்மையே செய்ய வேண்டும்.

தீயதன்மை:—கொலை, களவு, காமம், கள்ளுண்டல், பொய்சொல்லுதல் என்பன தீயசெயல்களாகும். இவற்றிற்கு நேர் எதிராக உள்ள செயல்கள் நல்ல செய்கைகளாகும். நற்செய்கைகளைப் புண்ணியமென்

றும், தீச்செய்கைகளைப் பாவம் என்றும் **வடமொழி**யிலே கூறுகின்றார்கள். **தமிழிலே** அவற்றை **நல்வினை, தீவினை** என்று கூறுவது வழக்கம்.

கொலையாவது உயிர்களை அவை வாழுகின்ற உடம்பினின்று பிரித்தல். ஒவ்வொரு உயிருக்கும் தன்னுடைய உடம்பில் மிகுந்த பற்று உண்டு. உடம்பை விட்டுவிட ஒருயிர்க்கும் விருப்பமில்லை. உடம்பை விட்டு நீங்கும்போது அது மிகுந்த துன்பத்தை அடைகின்றது. எங்கும் இருக்கின்ற கடவுளுக்கு உயிர்களும் உடம்புகளும் கோயில்களாக இருக்கின்றன. ஆதலால் கொலை செய்வது கடவுளுக்கும் உயிருக்கும் பொருத்தமில்லாத செய்கையாக இருக்கின்றது. எல்லா உயிரும் கடவுளுடைய திருமுன்பு ஒரே நிலையில் உள்ளவைகளே. எல்லாங் கடவுளுடைய அடிமைகள். ஒருயிர்க்கு மற்றோருயிர் அடிமையாகாது. ஆதலால் ஒன்று மற்றொன்றைக் கொல்ல உரிமையுடையதன்று. உலகத்திலுள்ள எல்லாப் பொருளையும் உயிர் நுகருவதற்கு உடம்பு கருவியாக இருக்கின்றது என்பதை முன்காட்டியுள்ளோம். ஆதலால் உடம்பினின்றும் உயிரை ஓட்டுவது மிகவுங் கடுமையான தீச்செயல். அதனினும் இழிந்த செயல் வேறு இல்லை. சிலர் தம்முடைய உடம்பை வளர்ப்பதற்காக மற்ற உயிர்களைக் கொன்று அவற்றின் ஊனைத் தின்கின்றார்கள். இவர்களுடைய வயிறு மற்ற உயிர்களுக்குச் **சுடுகாடாக** இருக்கின்றது. தங்களை மற்றவர்கள் கொல்லவந்தால் தமக்கு எவ்வளவு அச்சமும் துன்பமும்

உண்டாகுமோ அவ்வாறே மற்ற வுயிர்களுக்கும் தாம் அவற்றைக் கொல்லும்போது அச்சமும், துன்பமும் உண்டாகுமென்றெண்ணவேண்டும். அடித்தல், வருத்துதல், கடுஞ்சொல் சொல்லுதல் முதலியனவும் இதன் சார்பாகிய தீச்செயல்களே. இவையெல்லாம் பெரும்பாலும் ஆராத சினத்தினாலே ஏற்படுவதால் **ஔவையார்** 'ஆறுவது சினம்' என்றார். தமக்குப் பிறர் கெடுதிசெய்தாலும் அவரிடம் பகைமை பாராட்டாது தனது வெகுளியை (கோபத்தை) அடக்கிக் கொள்ளுதல் மிகவும் நலம்.

கொலைக்கு எதிரிடையான செயல் மற்ற உயிர்களுக்குத் தீங்கு வராமல் அவற்றைப் பாதுகாப்பது. உணவில்லாத உயிர்களுக்கு உணவு கொடுத்தலும், நீர் வேட்கை யுள்ளவர்களுக்குத் தண்ணீர் அளித்தலும், உடை இல்லாதவர்களுக்குத் துணி கொடுத்தலும், நோயாளிகளுக்கு மருந்து உதவுதலும், கல்வியில்லாதவர்களுக்குக் கல்வி பயிற்றுவித்தலும், இவைபோன்ற செய்கைகளுஞ் சிறந்த அறமாகும். பிற உயிர்களிடத்தில் இரக்கம்வைத்தலும், இனிமையான சொல் கூறுதலும், இயன்றவரை வேண்டியதை உதவுதலும் தக்க அருட் செயல்களாம்.

பிறருடைய பொருள்களை அவருடையகருத்திற்கு மாறாகத் தாமே தம்முடையனபோல எடுத்துக்கொள்ளுதல் களவு எனப்படும். ஒவ்வொருவருந் தாம் தாம் முயற்சிசெய்துபெற்ற பொருள்களையும், பெற்றோரும்

உறவினரும் நண்பரும் விருப்பத்தோடு தமக்கு அளித்த பொருள்களையும் மாத்திரமே தம்முடைய செல்வமாகக் கருதல்வேண்டும். மற்றவர்கள் வருந்திப்பெற்ற பொருளைத் தாமே எடுத்துக்கொண்டால் அவர்கள் அந்தப் பொருளாலாகும் நன்மையை இழந்து துன்புறுவார்கள். ஆதலால் கொலைபோலக் களவும் பெரியதொரு தீச்செயலேயாகும். மற்றவர்களுக்குத் தம்மால் இயன்றதைக் கொடுப்பதே அதற்கு நேர் எதிரான நற்செயல். கொடை எப்பொழுதும் தகுதியுள்ளவர்களுக்கும் எளியவர்களுக்குமே செய்யற்பாலது. கடவுளுடைய அடியார்களும், நல்ல் நெறியிலே நிற்பவர்களும் தக்கவர்களாவார்கள். உண்டி, உடை, உறைவிடம் இல்லாதவர்கள் எளியவர்களாவார்கள் உடம்பிலே வலிமையிருந்தும் உழைத்துப் பொருள் தேடாதவர்களுக்கு ஏதாவதுகொடுப்பவர் அவர்கள் சோம்பேறிகளாய்த் திரிவதற்குப் பழியேற்பர். அவர்களுக்கு வேலையில்லாமற்போனால் வேலையில் அமர்த்திக்கூலிகொடுக்க வேண்டியதுதான் முறை. ஈகை, தக்கவர்களுக்குத் தக்கபடி செய்யவேண்டுமென்பது 'பாத்திர மறிந்து பிச்சை கொடு' என்ற முதுமொழியால் விளங்கும்.

பிறருடைய பொருள்போலவே அவருடைய பெண்டிரும் அவர் உடைமையாகும். பொருளைப் பார்க்கிலும் பெண்டிரைமிகவும்அதிகமாகப் பேணுவர். பெண்டிர்க்குக் கற்புநிலை தவறும் வண்ணம் அவர்களுக்குக் கெடுதிசெய்தால் அவருக்கும், அவரைச் சார்ந்தவருக்கும் அளவில்லாதமனவருத்தமும்இருவகையாருக்கும்

இகழ்ச்சி, பழி, பகைமை முதலியனவும் ஏற்படும். ஆதலால் பிறபெண்டிரிடத்துக்கொள்ளும்காமமானது மிகவுங் கெடுதியான தீச்செயற்கு இடந்தருவது. ஆதலால் ஒவ்வொருவரும் தமது உள்ளத்தை மனம்போன வழியில் போகவொட்டாது தடை செய்யவேண்டும். தம்மோடு ஒத்த இயல்புடைய மங்கையரை மணந்து இல்லறம் நடத்துவதே தக்க செயலாகும். அன்பில்லாது பொருள் கருதிப் பலரையும் விரும்பும் பொது மகளிரிடம் பற்றுவைத்து ஒழுகுபவர்களுக்கும் மனக் கவலையும், பொருள் இழப்பும், பல்வகைப் பிணியும் உண்டாகும். ஆதலால் பொதுமகளிருடைய உறவும் மிகவுங் கெடுதியுள்ளதே.

# ஒழுக்கம்—நல்லியல்பு

சமயமானது நிலைத்த இன்பத்தை அடையக் கூடிய வழி என்றும், அது கடவுள் வழிபாட்டினைத் தனக்கு இலக்கணமாக வுடையது என்றும் முற்பகுதியில் கூறப்பட்டது. **கடவுள் வழிபாட்டிற்கு** அடிப்படையாக உள்ளது **ஒழுக்கம்**. ஒழுக்கமில்லாத இடத்துக் கடவுள் வழிபாட்டால் பெரும்பயன் விளைவதில்லை. இம்மையிலும் மறுமையிலும் நல்ல நிலையை அடைவதற்கு ஒழுக்கமே காரணமாதலால் அதனை உயிரைப் பார்க்கிலும் அதிகமாகப் போற்றுதல் வேண்டுமென்று ஆசிரியர் **திருவள்ளுவர்** கூறியுள்ளார். தனக்கும் பிறர்க்கும் குற்றமற்ற நன்மை விளைவதற்கு ஏதுவாய நல்லெண்ணம், நற்சொல், நன்னடக்கை என்னும் இவற்றைக் கடைப்பிடித்தலே ஒழுக்கத்தின் சிறந்த இலக்கணமாகும். நல்லொழுக்கமே அறமென்று சொல்லப்படுவது. சொல்லிற்கும், செய்கைக்கும் காரணம் எண்ணமாதலால் எண்ணம் குற்றமற்றதாக இருப்பதே அறமென்றார் **திருவள்ளுவர்**.

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்..."

என்பது காண்க. மனத்தில் குற்றமில்லாமலிருத்தலாவது, பிறபொருளிடத்துத் தவறிய விருப்புவைத்தலும், அப்பொருள் கிடையாமையால் சினமடைதலும், பிறர்க்கு அது கிடைத்தமையால் பொறாமை கொள்ளுதலும், தான் அதனைப் பெறுவதற்காகப் பிறரை வஞ்

சிக்கக் கருதுதலும், தனக்கும் பிறர்க்கும் செய்ய வேண்டிய கடமைகளைக் கருதாதிருத்தலும் ஆகிய பல வகைக் குறைவுகளும் இல்லாமல் தனக்கும் பிறர்க்கும் நன்மையே கருதி முயலுதலாகும். எப்பொழுது ஒருவனுக்குத் தீய எண்ணங்களும், சோம்பலும் இல்லையோ அப்பொழுது தீயவற்றையும் பயனில்லாதவற்றையும் சொல்லுதல் ஏற்படாது. இனியசொல் கூறுதலும், பயனுள்ளனவற்றைக் கற்றலும் கேட்டலும் எளிதாக அமையும். அதனால் நடையும் சிறக்கும்.

தன் கடமையைத் தெரிய விரும்புகின்றவன் தனக்குப் பிறர் செய்கின்ற நன்மையை நினைத்தல் வேண்டும். தான் பிறந்தவுடன் தனக்கு நன்மை செய்கின்றவர் தாயும், தந்தையும் ஆதலால் **ஔவையார்** 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றார். தனக்குக் கல்வி பயிற்றுகின்றவன் தன்னுடைய ஆசிரியன் ஆகின்றான். பல வகையிலும் நல்வழி காட்டித் தனது வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகின்றவர்கள் உறவினரும் நண்பரும் ஆவர். தனது குடியும் பிற குடிகளும் நாட்டில் நன்றாக வாழும் வண்ணம் பாது காக்கின்றவன் அரசனாவான். மக்கள் எல்லாரையும் படைத்துக் காக்கின்றவர் கடவுளாவார். மக்களுக்கு மக்களே யன்றிக் கீழ்ப்பட்ட உயிர்களும் ஒவ்வொரு சமயத்தில் அவருடைய வாழ்க்கைக்குத் துணைபுரிகின்றன. உயிருள்ள பொருள்கள் யாவும் இன்பதுன்பம் நுகர்கின்றன. இவற்றையெல்லாம் உணர்ந்து அவ்வவற்றிற்குரிய கடமைகளைச் செய்யும் கருத்துடைய

வனாக இருத்தல் நல்லொழுக்கத்திற்கு அடிப்படையாகும். தாய் செய்த நன்றியைப் பாராட்ட வேண்டும். தந்தை சொல்வழி நிற்றல் வேண்டும். ஆசானிடத்து அன்பும் அச்சமும் உடையவனாயிருத்தல் வேண்டும். உறவினர்க்கும் நண்பர்க்கும் உற்றவிடத்து உதவவேண்டும். அரசன் சக்கரநெறி நிற்கவேண்டும். ஆன்றோர் நூலைப் போற்றுதல் வேண்டும். கடவுளுடைய திருவடியில் கரவாத திண்ணிய அன்பு வேண்டும். சிற்றுயிர்களுக்கு இரங்கவேண்டும். பிறருடைய மனைவி மக்கள் செல்வங்களை வவ்வுதல் கூடாது. யாவரிடத்துஞ் சினத்தை யகற்ற வேண்டும். புறங்கூறுதலையும், பொறாமை கொள்ளுதலையும் ஒழித்தல் வேண்டும். ஒருவரையும் வஞ்சித்தல் கூடாது. தனது உடம்பிற்கும் உயிர்க்கும் கெடுதியானவற்றை விலக்கும் எண்ணத்தையே யுள்ளத்திற் பதித்துக்கொள்ளப் பயிலுதல் வேண்டும். இத்தகைய நல்ல கருத்துக்கள் நிறைந்த உள்ளமே நன்மனமாகும். நன்மனமுடையவனே **நல்லியல்பாளன்** எனப்படுவான். நல்லியல்பே ஒழுக்கத்திற் சேர்க்கும்.

---

# நற்பழக்கம்

ஒருவனுக்கு மனம் திருந்தி நல்லியல்பு அமைய வேண்டுமென்றால் நல்ல செயலைச் செய்கின்ற பழக்கமே அதற்குச் சிறந்த கருவியாகும். நல்லியல்பை அடையவேண்டுமென்று ஒருவன் விரும்பினாலும் நல்ல பழக்கமில்லாவிடின் அவன் விருப்பம் நிறைவேறாது. இயற்கைக்கு அடுத்தது பழக்கமென்பது பெரியோர் கருத்து. பழக்கமென்பது ஒரு செய்கையைப் பல காலம் ஒருவன் செய்வதால் ஏற்படுவது. பழகிய செய்கை எளிதாகத் தட்டுத் தடையில்லாமல் நிகழ்ச்சியில் வரும். பிறக்கும்போது ஒருவனும் விரைவாக எழுதவாவது பேசவாவது அறியமாட்டான். 'சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்பது போல எழுத்தும் பேச்சும் பழக்கத்தாலே ஒருவனுக்கு எளிதாகி விடுகின்றன. அவ்வாறே பிற செயல்களுமாம். அது நற்செயலுக்கும் தீச்செயலுக்கும் ஒக்கும். நூல்களைக் கற்பதற்கே பழகினவனுக்கு கல்லாதிருப்பது எளிது அன்று. கள் குடித்துப் பழகினவனுக்கு அதனை நிறுத்துதல் எளிது அன்று. தீய பழக்கங்கள் ஒருவனுக்கு ஏற்பட்டு விட்டால் அவன் அவற்றினின்றும் விடுபடுதல் மிகவும் அருமை. ஆதலால் இளமையிலேயே ஒருவன் நல்ல பழக்கங்களைப் பழகுதல் வேண்டும். தனக்கும் பிறர்க்கும் நன்மை செய்வதற்குக் காரணமாகவுள்ள செயல்களை ஒவ்வொரு நாளும் செய்ய முயலுதல் நல்ல பழக்கத்திற்கு ஏதுவாகும்.

தான் நல்ல உள்ளமும் நல்ல உடம்பும் உடையவனாக இருந்தாற்றான்-பிறர்க்கு நன்மை செய்யும் தகுதியுடையவனாக இருப்பான். ஆதலால் உடலும் உள்ளமும் திருந்துதற்கு ஏதுவாய செயல்களை யாவரும் ஒவ்வொரு நாளும் செய்யப் பழகுதல் வேண்டும்.

உள்ளமும் உடலும் ஒன்றுக்கொன்று உதவியாக இருக்கின்றன. காலையில் துயில் விட்டு எழுதல் உள்ளத்திற்கும் உடம்பிற்கும் நல்லது. கதிரவன் தோன்றுவதற்கு மூன்றே முக்கால் நாழிகைக்கு முன்னே படுக்கை விட்டு எழுதல் உள்ளத்தின் ஒருமைக்கும், உடம்பைப் புனிதமாக்கிக் கொள்ளுதற்கும் இடந் தரும். விடியற்காலையில் எழுந்தவுடன் புறத்தே தோன்றுகின்ற இருளை நீக்கிக் கதிரவன் ஒளி பரப்புவது போல நமது உள்ளத்தே இருக்கும் இருளை நீக்கி நல்லறிவாகிய ஒளியைத் தரவேண்டுமென்று கடவுளை நினைந்து தொழுதல் எல்லார்க்கும் முதற் கடமையாகும். இரவில் யாதொரு கெடுதியும் வராது நம்மைக் காப்பாற்றிய கடவுள்பால் நன்றி யுணர்தலும் கடவுள் வணக்கத்தின் சார்பாகும். அவ்வாறே நம்மைப் பாதுகாக்கும் தாய் தந்தையர், ஆசிரியர், நண்பர் முதலியோர் செய்த நன்றியையும் நாம் ஒவ்வொரு நாள் காலையிலும் நினைத்தல் விரும்பற்பாலதே யாகும். பிறர் செய்த நன்றியை நாம் உணரவுணர நமக்கும் பிறர்க்கு நன்மை செய்யவேண்டுமென்ற எண்ணம் உதிக்கும். அது காரணமாக நம்மையும் நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ளக் கருதுவோம்.

வழங்கும் பகுதி

காலையில் இயன்றதொரு சுத்தி செய்து கடவுளை நினைந்தும், நல்லோரைக் கருதியுஞ் சிறிது பொழுது கழித்தபின்பு தனது நாட்கடன்களைச் செய்யத் தொடங்கவேண்டும். முதலில் நமது உடம்பு சுத்தமாதற்கு ஏதுவாகிய செயல்கள் செய்யற்பாலன. நமது குடல் சுத்தமான பின்பு நமது பல்லையும் சுத்தஞ் செய்தல் வேண்டும். குடலும் பல்லுமே பல்வகைநோய் வித்துக்களுக்கு இடமாகி யிருத்தலால் இரண்டினையும் ஒவ்வொரு நாளும் தூயதாக்க வேண்டுமென்று நம் பெரியோர்கள் பணித்துள்ளார்கள். பின்னர் வெளிஉடல் முழுவதையும் தூயதாக்கும் முழுக்கு நிகழ்தற்பாலது. ஆறு போன்ற நீர் நிலைகளில் முழுகுதல் பொறியடக்கத்திற்குக் காரணமென்று பெரியோர் கூறுகின்றார்கள். நோய்கொண்டோர் வெந்நீரில் முழுகலாம். தண்ணீரில் மூழ்குவார்க்கு உடம்பில் வெப்பம் உண்டாகும் பொருட்டு ஓடுதல், விரைவாக நடத்தல், குதித்தல், வீழ்ந்தெழுதல், மூச்சுப்பிடித்தல் முதலிய உடற்பயிற்சிகளுள் ஏதாவது தமக்கு இயன்றதை ஒவ்வொருவரும் பழகிக்கொள்ளுதல் வேண்டும். உடம்பைச் சுத்தஞ் செய்வதற்கு மருந்து வேர்கள், இலைகள் முதலியவற்றாலாகிய பொடியை உபயோகிக்கலாம். வில்வமரத்திற்கு அடியில் உள்ள மண்ணை வடித்தெடுத்துத் தெள்ளிதாக்கிப் பயன்படுத்துதல் நமதுநாட்டில் வழக்கமாக விருந்தது. மஞ்சள் தேய்த்து முழுகும் வழக்கம் பெண்பாலாரிடத்து மட்டும் இன்றும் நின்று நிலவுகின்றது.

முழுக்கு முடித்துத் தோய்த்து உலர்ந்த ஆடையை உடுத்தியபின், தத்தஞ் சமய அடையாளங்களை அணிந்து கொள்ளுதல் நம்மவர் வழக்கம். 'நீறில்லா நெற்றி பாழ்' என்றதும் அக் கருத்துப்பற்றியேயாம். சமய அடையாளங்களை அணியுங் காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் சமயக் கடவுளை நினைத்தலும் வாழ்த்தலும் நிகழவேண்டு மென்பது சமயக் கொள்கையாகும். எல்லார்க்கும் ஒருவன் செய்யவேண்டிய கடமைகளை நினைப்பூட்டும் சமயக்கிரியைகளையும் அக் காலத்தே செய்வதுண்டு. இவ்வகையான சமயச் செய்கைகளைச் **சந்தியாவந்தனம்** என்று இந்த நாட்டினர் கூறுவர். உடம்பு புனிதமானவுடன் அதனைக் கண்ட மனமும் புனிதமாகும். அப்புனிதமானது நிலை பெறுவதற்குக் கடவுள் வணக்கம் பற்றிய சமயச் செயல் நடைபெறுகின்றது. கடவுளுடைய திருப் பெயர் மந்திரத்தை உருவெண்ணுதலும் அத்தகைய செயலே. சைவர்கள் ஐந்தெழுத்து மந்திரத்தையும் வைணவர்கள் எட்டெழுத்து மந்திரத்தையும் ஓதுதல் மரபு.

இத்தகைய சமயச் செயல் முடிந்த பின்பு காலையுணவு உட்கொண்டு தத்தமக்குரிய கல்வி அல்லது தொழில் முறைகளில் புகுதல் வேண்டற்பாலது. காலையுணவு கடினமாக இருத்தல் கூடாது. சோம்பற் கேதுவாகிய புளிப்புப் பொருள்கள் விலக்கப்பட வேண்டும். ஒவ்வொருவருடைய முயற்சிக் கேற்ற உணவுகள் கொள்ளுதலே நலம். ஊனைத்தின்று

ஊனைப் பெருக்குகின்ற வழக்கத்தைக் கைவிடுதல் நலம். எவ்வகை மக்கட்கும் ஒத்தனவாகவே கனி காய் கீரை என்னும் உணவுப்பொருள்கள் பலவகை யாக அமைந்துள்ளன. இவற்றின் விவரம் மருத்துவ நூலில் தெளிவாக விளங்கும்.

எம்முயற்சியிற் சென்றாலும் சோம்பலும் அளவு கடந்த படபடப்பும் இல்லாமல் உள்ளமும் உடம்பும் ஒரே வழிசெல்லுந் தன்மையோடு செயல் செய்யப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். தம்மை முயற்சி காரணமாக நாடும் மக்கள் யாவர்க்கும் இன்சொற் கூறி நயந்தரத்தக்க வழியில் செயல்களைச் செய்தல் வேண்டும். வயிற்றின் பொருட்டுத் தொழில் செய்ய வேண்டிய அவசியமில்லாத செல்வர்களுக்கும், தம்மு டைய நிலம் பொருள் முதலியவற்றைப் பேணி வளர்த் தற்கும் பாதுகாத்தற்கும் உரிய நன்முயற்சி பலவுள. அவர்கள் மனைவி மக்கள் முதலியவர்களுக்கு நல்ல கல்வியும் ஒழுக்கமும் பயிற்றுதற்குரிய முயற்சிகளை யாவது, நாட்டினர்க்குப் பெருநன்மை புரியும் முயற்சி களையாவது, இசை, ஓவியம் முதலிய கலைகளை வளர்க் கும் முயற்சிகளையாவது கைக்கொண்டு ஒவ்வொரு நாளும் தாம் கைக்கொண்ட நன்னோக்கத்திற்கு ஏது வாய செயல்களைச் செய்வதிலே தமது காலத்தைப் பயன்படுத்த வேண்டுமேயன்றித் தீயபழக்கங்களிலே பொழுதைப் போக்குதல் கூடாது.

சிலர் நாள்தோறும் இருமுறை உணவு கொண் டாற் போதுமென்பர். அஃது ஏலாதவர் மும்முறை

கொள்ளலாம். வேறுசிலர்க்குச் சிறிதுசிறிதாக நான்கு முறை அல்லது ஐந்துமுறை உணவு கொள்ளுவது தங்கள் உடம்புக்குஒத்திருப்பதாகக் கூறுகின்றார்கள். எவ்வாறாயினும் ஒருமுறை உண்ட உணவு நன்கு செரித்த பின்னரே அடுத்த முறை உணவு கொள்ளுதல் வேண்டும். பொதுவாகக் கடினமான உணவு செரிப்பதற்கு ஐந்துமணி நேரமாகு மென்பர். உணவின் அளவு வயிற்றின் அளவிற்குக் குறைவாகவே இருத்தல்வேண்டும். உண்டு எழும்போது இன்னும் சிறிது உண்ணலாம் என்கின்ற உணர்ச்சி தோன்றும் வண்ணம் உணவு கொள்ளுதல் நலம். இதனால் மிகவும் உணவைக் குறைத்துவிட வேண்டுமென்பது கருத்தன்று. மாலைக் காலத்தில் வேலையின் நீங்கி உடற்பயிற்சி செய்தலும், பின்னர் உடம்பைச் சுத்திசெய்து கொள்ளுதலும், கடவுளைத் தொழுதலும் இரவில் உணவு கொள்வதற்குமுன் நிகழற்பாலன. இரவில் ஒன்பதுமணிக்கு முன் உணவுகொள்ளுதல் நலம். உண்டபின் குறு நடைகொண்டு உலாவுதலும், ஒரு மணி நேரமாகும் வரை படுக்கைக்குப் போகாதிருத்தலும் உடம்பிற்கு நலந்தருவன. நள்ளிரவிற்கு முன் துயிலுதலே நலம்.

'சேமம்புகினும் யாமத்துறங்கு' என்றார் **ஔவையார்.** தூக்கத்திற்கு ஏறக்குறைய ஆறுமணி நேரம் வேண்டுமென்பர். விடியற்காலத்தில் 5 அல்லது $3\frac{3}{4}$ நாழிகைக்கு முன் எழவேண்டுமாயின் இரவில் 10 அல்லது $10\frac{1}{2}$ மணிக்குள் துயில் கொள்ளுவதற்குப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். தூக்கம் இல்லாமல் சோம்

பலாகப் படுத்துக் காலத்தைக் கழித்தல் கூடாது. துயில் கொள்ளுவதற்கு முன்னே கடவுளைத் தொழுது நற்சிந்தையோடிருத்தல் வேண்டும். தூக்கத்திற்குரிய நேரத்தை உடம்பையும் உள்ளத்தையும் கெடுக்குந் தன்மையையுடைய இசைகேட்டல், கூத்துப் பார்த்தல் முதலியவைகளில் வீணாகக் கழித்தல் கூடாது. நல்லிசைப் பாடல்களையும், நல்ல விளையாட்டுகளையும், நல்ல நாடகங்களையும் மாலைக் காலத்தில் நடைபெறக் காணலாம். பகலில் உறங்குதல் நல்லதன்று. ஆனால் உண்டபின் சிறிது ஓய்வுற்றிருத்தல் நலமென்பர்.

நாடோறும் உடல்நலம், உணவு, முயற்சி, பிறர் தொடர்பு, கடவுள் வழிபாடு என்பவற்றின் சம்பந்தமாகச் செய்யும் செயல்கள் யாவற்றிலும் ஒழுங்கான ஊக்கமும் காலவரையறையும் உடையவராக ஒவ்வொருவரும் பழகிக் கொண்டால் நல்லொழுக்கத்திற்கு ஏதுவாய நற்பழக்கங்கள் ஏற்பட்டு நமது வாழ்க்கை சிறக்குமென்பது திண்ணம்.

# கல்வி

அறிவு மக்களுக்கு இரண்டு வகைப்படும். அவை யாவன ; இயற்கையறிவும் செயற்கையறிவுமாம். ஐம் பொறி வழியாகப் பெறுகின்ற அறிவு மக்களுக்கும் விலங்கிற்கும் உள்ளது. அஃது இயற்கை யறிவு. மன விரிவிற்குக் காரணமாக நூல்களினாலே பெறு கின்ற அறிவு செயற்கை அறிவாகும். செயற்கை அறி வினாலே இயற்கை அறிவு 'செம்மை அடைகின்றது. உள்ளமானது விரிந்து உலகம் முழுவதையும் தன்னு ளடக்கி நிற்கின்ற உயர்ந்த நிலைமையை அடைகின் றது. பண்டையோர் தேடிவைத்த அரிய உண்மைக ளின் பெரும்பயனை அடைவதற்கும் நமது செயற்கை யறிவே காரணமாகி நிற்கின்றது. இச்செயற்கை அறி விற்குக் காரணமாகிய கல்வியில்லாமையால் மக்களைப் போல உயர்ந்த வாழ்க்கைச் சீர்மை விலங்குகளுக் கும் விலங்கினை யொத்த இயற்கை யறிவினையுடைய மனிதப் பகுதியாய மாக்களுக்கும் அமையவில்லை. அவ்வாறே மக்களுள்ளும் கல்வி யறிவு நிரம்பியவர்க் கும் கல்வி யறிவில்லாதவர்க்கும் மிக்க வேறுபாடு காணப்படும். விலங்குகளை அறிவுமிக்க மனிதன் அடக் கித் தன் வசமாக்கித் தமக்கே பெரிதும் பயன்படுத் திக் கொள்ளுவதுபோல மக்களுள் கல்வியறிவில்லாத வரை கல்வி யறிவுடையார் அடக்கியாளுவதை நாம் கண்கூடாகக் காணலாம். ஆதலால் **திருவள்ளுவநாய னர்**, 'கற்றவர் மனிதர் கல்லாதவர் விலங்கு' என்ற குறிப்பு வைத்தனர்.

" விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். "

உலக முதல்வனாய கடவுளை வழிபடுவதற்கும், நல்லன தீயன இன்னவை என்று நன்கு தெரிந்து கொள்வதற்கும் கல்வியே சிறந்த கருவியாக இருக்கின்றது.

" கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை "
" கல்லார் நெஞ்சி னில்லா னீசன் ",

என்றதும் அக் கருத்துப் பற்றியே. இதனால் கல்வியின் பெருமை சொல்லுதற்கரிய தென்பது யாவர்க்கும் விளங்கும்.

அறிய வேண்டுவனவற்றை யெல்லாம் அறிவது கல்வியென்னில் அறிய வேண்டுவன அளவில்லாமலிருப்பதினாலே கல்வியும் அளவு கடந்ததாகவே யிருக்கின்றது. ஆனால் மக்களுடைய அறிவோ சிற்றறிவு. அவர்களாயுளோ சிறிய அளவுட்பட்டது. அவருக்குப் பிணிகள் பலவுள. பிணி வந்த காலத்து கல்விகற்றல் இயலாது. இதனால் " கல்வி கரையில கற்பவர் நாள் சில, மெல்ல நினைக்கிற் பிணி பல " என்றார் **பெரியர்**. கல்வியின் அளவற்ற தன்மையையும் வாழ்நாட் சிறுமையினையும் நோக்குங் காலத்து ஒவ்வொருவனும் தனக்கு இன்றியமையாதனவற்றைக் கற்றுக்கொள்ளல் வேண்டுமென்பதும், அவற்றைக் கற்பதற்கே வாழ்நாள் முழுவதுங் காண்பது அரிதென்பதும் புலனாகின்றது. ஆதலால் ஆசிரியர் **திருவள்ளுவனார்**, ' கற்பவை கற்க ' என்றார்.

மக்கட் கூட்டத்திலே ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கற்றுத் தம்முள் அளவளாவுதலால் பலர் கல்விப்பயனைச் சிலர் எளிதாகப் பெற்றுக்கொள்வதற்கு இடனுண்டு. ஒருவனே எல்லாவற்றையுங் கற்க முயலுவதைப் பார்க்கிலும் தன்னாலியன்றவரை தான் சிலவற்றைக் கற்றுக்கொண்டு பலவற்றை மற்றவர்களிடம் கேட்டுக்கொள்ளுதல் எளிதாகுமாதலால் ஆசிரியர் 'கற்றலிற் கேட்டலே நன்று' என்றார். 'கற்றல் கேட்டலுடையார்' என்றலுமது.

மக்கட் கூட்டத்திலேயுள்ள ஒவ்வொருவரும் இம்மை மறுமை வீடு என்னும் மூன்றிற்கும் ஏதுவாய கல்வியைப் பெற முயலுதல் வேண்டும். இம்மையில் உடல் நலம் பெறுதற்கும், உள்ளம் செம்மை எய்துதற்கும், மறுமையில் நல்ல கதி யடைவதற்கும், முடிவில் நிலைத்த இன்பம் பெறுவதற்கும் உரிய கல்வியைப் பயிலவேண்டும். ஒருவன் தன் உணவினையும் உடையினையும் தானிருக்கும் இடத்தையும் நோய்க்கிடங் கொடாமல் வைத்துக் கொள்ளுதற்குரிய விதிகளை அறிதல் வேண்டும். நோய் வந்த விடத்து ஒரு கூட்டத்துள் பலர்க்கு உதவி செய்தற்கு உரிய மருத்துவக் கல்வியை யாவரும் பெற்றுக்கொள்ள முடியாது. சிலராவது மருத்துவத்தை நன்றாகக் கற்றுப் பலர்க்கும் நோய் தீர்த்தாலொழிய ஒரு கூட்டத்தில் வாழ்க்கை சிறவாது. ஒவ்வொருவரும் ஏதாவதோர் உடற்பயிற்சியை அறிந்துகொள்ளல் வேண்டும். ஆனால் உடற்பயிற்சி முறை பலவற்றையும் சிலர்தான் பலர்க்

குப் போதித்தல் கூடும். ஒவ்வொருவரும் வாழ்நாள் செலுத்துதற்கு வேண்டும் பொருள் தேடுதற்குரிய ஒரு நல்வழியைத் தெரிந்திருத்தல் வேண்டும். பொருள் வைத்திருப்பார் அதனைப் போற்றவும், பெருக்கவும் வேண்டிய வழியைப் பெற்றிருத்தல் வேண்டும். அரசாங்கத்தார் நாட்டினர் செல்வவளம் பெறுதற்குரிய வழிகள் யாவற்றையும் அறிந்து உதவற்பாலர். பலர் கல்வி கற்றாலும் சிலரே மிகுந்த பயிற்சியுடையராய்க் கல்வி கற்பிக்குந் திறமையுடையவரா யிருக்கின்றனர்; அரசாங்கம் நடத்துதற்குரிய கல்வியும் சிலர்க்கே நன்றாக அமைகின்றது.

ஒவ்வொருவனும் தனது தாய்மொழியில் பிழையறத் தங் கருத்துக்களை எழுதவும் பேசவும் பழகிக் கொள்ளுதல் வேண்டும். பல மொழிகளிலுள்ள கருத்துக்களை எல்லாம் ஒரு மொழியிலே கொணர்ந்து அமைத்தற்குரிய பன்மொழிக்கல்வி சிலர்க்கே அமையும். ஒருவன் தனது தாய்மொழியையும், உலகிற் பெரிதும் பயன்படும் அரச மொழியையுமே எளிதாகக் கற்றல் கூடும். சிலர்க்கு ஒரே மொழிதான் கற்கக் கூடும். அவர்களைப் பலமொழி கற்கும்படி வலியுறுத்தல் பயனற்ற செய்கை. ஒற்றுமையாக வாழ்தற்குரிய ஒழுக்கக் கல்வியை யாவரும் உணர்ந்திருத்தல் வேண்டும். கொலை, களவு, கள்ளுண்டல், பொய் மொழிதல், பிறர்மனை விழைதல் முதலியவற்றாற் பெருங்கேடு விளையுமென்பதும் இவற்றை விளக்கி இன்சொற் சொல்லுதலையும் உற்றவிடத்து உதவுதலையும் எவ்வுயிர்க்கும்

இரங்குதலையும் கைக்கொண்டால் இம்மையினும் மறுமையினும் நல்ல நிலை யடையலா மென்பதையும் அறிவிக்கின்ற நீதிநூல்களையும், சாத்திரங்களையும் யாவரும் உணர்தல் வேண்டும். அவ்வாறே ஒவ்வொருவனும் தனது சமயக்கொள்கைகளை நன்றாக உணர்ந்து அக்கொள்கைகளுக் கிணங்க கடவுள் வழிபாடு செய்ய வேண்டும். இந்நாட்டிலே நம்மவர்களுட் பலரும் தமது சமயக்கொள்கைகள் இன்னவென்றே அறியாமல், சமயத்தினால் உண்டாய பயன் யாதும் பெறாமல், முன்னோர் தேடிவைத்த சமயநிலைய நிதிகளைப் பிறசமயத்தார் கொள்ளை கொள்ள இடங்கொடுத்துவிட்டுச் சும்மா காலங்கழிக்கின்றார். சமயக்கல்வியின்மையால் வந்த கேட்டிற்கு அளவில்லை. ஆதலால் ஒவ்வொருவரும் தமது சமயக்கொள்கையை அறிய முன் வருதல் வேண்டும். கல்வியினாலாகிய பலன் கடவுளைத் தொழுதலென்று **திருவள்ளுவர்** கூறியிருத்தலின் **சமயக்கல்வியே** பிற கல்விகளெல்லாவற்றினுஞ் சிறந்தது. இதுகாறுங் கூறியவாற்றால் மக்கட் கூட்டம் சிறந்த வாழ்க்கையை எய்த வேண்டுமென்றால் ஒவ்வொரு மனிதனும் தன்னளவிற் கேற்ப **உடற்கல்வி, ஒழுக்கக் கல்வி, தொழிற்கல்வி, சமயக்கல்வி** என்பவற்றைக் கற்றுப் பயில வேண்டுமென்பது கூறப்பட்டது. கற்பார்க்குக் கல்வியே தன்னியல்பால் மிக்க இனிமை பயப்பது. நல்ல கல்வி நன்மையையும், தீய கல்வி தீமையையும் பயக்கும். நல்லவருடைய நட்பானது இனிமை யுடைத்தாக இருத்தல் போல நூல்களின்

நயங்களை அறியுந்தோறும் அறியுந்தோறும் அளவில்லாத இன்பத்தை உள்ளத்திற்கு அவை நல்கும்.

கல்வி என்பது மக்கள் யாவருக்கும் பொதுவாக இருப்பவும் சில வகுப்பினர் பெண்களுக்குக் கல்வி வேண்டாமென்கின்றார்கள். பெண்களை விலங்குகள் போலக் கருதாமல் ஆடவர்க்கு வாழ்க்கைத் துணையாகக் கருதுவார் யாவரும் வாழ்க்கை நலத்திற்குப் பெண்கல்வி இன்றியமையாததென்றே கூறுவர். கணவனுக்கும் மனைவிக்கும் ஒத்த அறிவும் குணமும் இருந்தாலொழிய இல்லறத்தில் ஒற்றுமை யிருத்தல் முடியாது. கலைக்குத் தலைமையான தெய்வமே பெண்ணுருவாகிய கலைமகளென்றால் பெண்களுக்குக் கல்வி கூடாதென்று சொல்லுவது எப்படி? தொழிற் கல்வி வகையுள் இல்லிற்குரிய கல்விகள் பெண்களுக்குச் சிறப்பாக எண்ணப்படும். பிற கலைகள் யாவர்க்கும் பொதுவே. பண்டைத் தமிழரசர் காலத்திலே பெண்மக்களுட் பலர் பெரும்புலவராக விளங்கினர். எல்லாக் குலத்திலும் நல்லிசைப்புலமை மெல்லியலாளர்கள் (**வெள்ளி வீதியார்** போன்றவர்கள்) அக்காலத்தே தழைத்தோங்கினர். ஆதலால் குலத்தினாலும், பாலினாலும் கல்வி சிலர்க்குக் கூடாது என்கின்ற கொள்கை ஆதியில் தமிழ்நாட்டிற் கிடையாது. அக்கொள்கை புதிதாகப் புகுந்ததே. ஆதலால் அதனை நாம் ஒதுக்கிவிடலாம்.

# நூற் பரப்பு

'கல்வி கரையில, கற்பவர் நாட்சில.'

நாம் அறியவேண்டிய பொருள்கள் அளவு கடந்துள்ளன. ஆதலாலே அவற்றைப் பற்றிக் கூறும் நூல்களும் அளவின்றி விரியுந் தன்மையன. அறியக் கூடியதும் உயிர்களின் திறமைக்குத் தக்கபடி பெருகிக்கொண்டே யிருக்கிறது.

'கற்றது கைம் மண்ணளவு கல்லாத துலகள வென்று உற்ற கலைமடந்தை யோதுகின்ருள்' என்றபடி கலைமகளே, தான் கற்றது சிறிதென்றும் கல்லாதது பெரிதென்றும் கருதி மேன்மேலும் கற்கின்ருள் என்ருல், கல்வியின் விரிவு எவ்வள வென்பதை எவருங் கூறமுடியாதன்ரே? பலவகைப்பட்ட கலைகள் யாவும் **கடவுளைப்** பற்றியன, **உயிர்களைப்**பற்றியன, **உலகத்தைப்**பற்றியன, என்னும் மூன்று பெரும் பிரிவுகளுள் அடங்கும். கடவுளின் உண்மையும் இயல்பும் அவர்க்கு உலகத்தோடும் உயிரோடும் உண்டாகிய தொடர்பும் ஆராய்ந்து அறிதற்குரிய கலைத்துறைகள் எண்ணில. அவற்றை மக்களது சிற்றறிவிற்கேற்ற வண்ணம் **அறிவுநூல், செயல்நூல்** என்னும் இருபிரிவினுள் அடக்கிக்கொள்ளலாம். செயல்நூல் கூறும் வழியே **சமயம்** என்று சொல்லப்படும். சமயமோ தேசந் தோறும் காலந்தோறும் வெவ்வேறு தன்மைப்பட்டு வெவ்வேறு தெய்வங்கட்கு உரியனவாய் விரிதலின் உலகத்திலுள்ள எல்லாச் சமயங்களையும் மேற்பரப்

பாக அறிவதற்கே மக்கள் வாழ்நாட் போதாது. சமயங்களை ஒத்துப்பார்த்து உண்மை கடைப்பிடிக்குங் கல்வியை (Study of Comparative Religions) ஒரு பெரிய ஆராய்ச்சித் துறையாகத் தற்காலத்தே மேனாட்டுப் புலவர் சிலர் கைக்கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு சமயத்தாரும் ஒவ்வொரு தேசத்தாரும் கூறும் பண்டைக் கதைகளின் தொகுப்பை ஒத்துப் பார்த்து ஆராய்ச்சிசெய்யும் முறை இதற்கு வேறாக அமைந்துள்ளது. அதை (Comparative Mythology) என்று மேனாட்டுப்புலவர் கூறுவர். கடவுள், உயிர், உலகம் என்பவற்றைப்பற்றி முடிவுகாணும் அறிவு நூல்களைத் தத்துவ ஞானம் அல்லது மெய்யுணர்ச்சி (Philosophy) என்ற பொருளுடைய சொல்லால் வழங்குவர். அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை அறியும் துறையும் ஒரு பெரிய கலை (Comparative Philosophy) யாக அமைந்துள்ளது. நமது இந்திய நாட்டிலே தத்துவ வுணர்ச்சியானது பண்டைக்காலந்தொட்டு மிக்க மேம்பாடுடையதாக நிகழ்ந்திருக்கிறது. இந் நாட்டிலுள்ள தத்துவநூல்கள் கிரீக் (Greece) தேசம், எகிப்து (Egypt) தேசம், சீனு (China) தேசம், பாபிலோனியா (Babylonia) நாடு முதலிய பண்டை நாகரீகம் படைத்த நாடுகளில் வழங்கிய தத்துவவுணர்ச்சியினும் மிக்க பெருமை சான்றது. அதன் விரிவினையும் நயத்தையும் மேனாட்டுக் கலைஞர் இன்னும் உணர்ந்திலர்; இந்நாட்டிலே யோகக் காட்சியினைத் திறமைபடப் பெற்று, அதன்

உதவிகொண்டு ஏனைமக்களார் காணப்படாத நுண் பொருள் யாவற்றையும் பல உலகங்களின் இயல்பையும் பெரியோர் உணர்ந்து நூல் செய்துள்ளார். யோகக்காட்சிக்கும் அப்பாற்பட்டதாய் ஒப்புயர் வற்ற கடவுட்காட்சியும் உடைய பெரியோருடைய அருள் நூல்களும் வழங்கி வருதலால் மெய்யுணர்ச்சியில் இந்நாட்டை வெல்லுதல் ஏனை நாட்டினர்க்கு எளிதன்று.

இந்நாட்டிலுள்ள தத்துவநூல்களும், சமயநூல்களும் **வைதிகப்பக்க**மெனவும் **தந்திரப்பக்க**மெனவும் இரு பெரும் பிரிவினுள் அடங்கும். வைதிகப்பக்கத்தில் சிறந்த ஞான நூல்கள் : 108 **உபநிடதங்**களும், வியாசர் செய்த **பிரம சூத்திர**மும், கண்ணன் இயற்றிய **பகவற்கீதை**யும் ஆமென வடமொழியாளர் கூறுவர். இவற்றிற்கு நீலகண்ட சிவாசாரியர், சங்கராசாரியர், இராமாநுஜாசாரியர், மத்துவா சாரியர் முதலியோர் வெவ்வேறு பொருள் கொண்டிருக்கின்றார்கள். அன்னோர் செய்த நூல்கள் அவரவர் பெயராற் **பாடியம்** எனப்படும்.

**தந்திரப்பக்க**மென்பது தமிழரது தத்துவவுணர்ச்சியை யுணர்த்தும் வடமொழி நூற்கோவையாகும். தந்திரங்கள் **சிவம், சத்தி, கணபதி, குமரக் கடவுள், திருமால், ஞாயிறு** என்னும் கடவுளர்க்குரிய வழிபாட்டு மந்திர நூல்களையும் பலவகைத் தத்துவ நூல்களையும் உள்ளடக்கி நிற்கும். அவற்றுளெல்லாம்

சிறந்தன **சைவ தந்திரங்கள்** அல்லது **சைவாகமங்கள்** எனப்படும். சைவாகமங்களின் தொகை 28. அவற்றின் வழிநூல்கள் 207, சார்பு நூல்கள் அவற்றினும் பல.

தமிழிலே மெய்யுணர்ச்சி தரும் சிறந்த நூல்கள் **தொல்காப்பியத்தின்** பகுதிகளும், **திருவள்ளுவர் குறளும்**, **திருமூலர்** முதலிய **சித்தர்கள் நூல்களும்**, **பன்னிரு திருமுறை**, **பதினான்கு சைவ சித்தாந்த சாத்திரம்** என்பனவும், இவற்றைச் சார்ந்தெழுந்த நூல்கள் பலவும் ஆம். வைதிகப் பக்கம், தந்திரப் பக்கம் என இருபகுதியையும் தழுவிய புராண நூல்கள் **பதினெண்புராணங்க**ளெனவும், **தலபுராணங்க**ளெனவும் விரிந்து கிடக்கின்றன. **இராமாயணம், பாரதம், சிவரகசியம்** முதலிய இதிகாசங்களும் இவற்றின் வேறான பெரு நூல்களாக வுள்ளன. இது காறுங் கூறிய நூல்களுட் குறித்த கருத்துக்களமைந்த பாடல்களும் காவியங்களும் பலப்பல.

கடவுட் சார்பாய சமய நூல்கள் ஒருபுறமிருப்ப, மக்களுடைய இயல்பினையும் ஆற்றலையும் வரலாற்றினையும்உணர்த்தும் நூல்களும் ஆராய்தற்குரியனவாய் விரிகின்றன. ஒவ்வொரு தேசத்திலுள்ள அரசர் சரித்திரம், பெரியார் சரித்திரம்,குடிகள்வரலாறு முதலியவற்றைச் சுருக்கமாகக் கற்கவேண்டுமென்றாலும் நமது ஆயுள் போதாது. மேலைநாட்டினர் உலக சரித்திரமென்று எழுதிய பெருநூல் (30) முப்பதிற்கு மேற்பட்ட

பெரும் புத்தகங்களாய் விரிந்து நிற்கின்றன. ஒவ்வொரு புத்தகமும் பன்னூறு பக்கங்களை யுடையன. மக்களுடைய தோற்ற வேறுபாடு சம்பந்தமான உடற்கூற்று ஆராய்ச்சியை ஒரு பெருங்கலை (Ethnology) யாக மேலைத்தேசத்தார் கைக்கொண்டுள்ளார்கள். மக்களுடைய உடம்பின் உட்பகுதி (Physiology-உடல்நூல்) யாராய்ச்சியும் அதன் சம்பந்தமான மருத்துவ நூற்பெருக்கமும் அளவிற்குள் அமைவதில்லை. இந் நாட்டிலே ஆரியமருத்துவ நூல் ஆயுள்வேத மெனப்படும். அதனினும் சிறந்ததாய் மிகவும் விரிந்ததாய்ப் பண்டைத் தமிழ்ப் பெரியோராகிய சித்தர்கள் பரம்பரையில் வந்துள்ள மருத்துவ நூல்கள் தற்காலத்திலே போற்றப்படாம லிருக்கின்றன. மனிதனின் நுண்ணுடம்பு சம்பந்தமாக உடம்போ டுள்ளவர்களையும் உடம்பை நீத்தவர்களையும் பற்றிய பலவகை யாராய்ச்சி (Psychic Research) அமெரிக்கா முதலிய மேனாட்டிலும் இந்நாட்டிலும் பல இடங்களில் நடந்துவருகின்றன. இவற்றைப்பற்றிக் கூறும் யோக நூல்களும் மந்திர நூல்களும் பலபடப் பரந்து கிடக்கின்றன. பலநாட்டு மக்களும் பேசும் பல வகை மொழிகளும் அவற்றின் கிளைகளும் மொழி நூல் வல்லாரால் நெடுங்காலமாக ஆராயப்பட்டு வருகின்றன. புதையுண்ட பண்டை நகரங்களிருந்த இடங்களைத் தோண்டி அங்குக் கிடப்பனவற்றை எடுத்து ஆராய்ச்சி செய்வாரும், நாணயங்களை ஆராய்ச்சி செய்வாரும், தனித்தனிப் பிரிவினராக

விளங்குகின்றார்கள். அவர்கள் செய்யும் ஆராய்ச்சி ஒரு பெருங்கலை (Archaeology-தொன்னூல்) யாகப் போற்றப்படுகின்றது.

மக்களுடைய ஒழுக்கத்திற்கு மூலமாகிய உண்மைகளை அறியும் ஆராய்ச்சி (Ethics-அறநூல்) யும், நினைப்பு, ஐயம், துணிபு முதலிய நமது உள்ளத்தின் வளத்தைப்பற்றி யறியும் ஆராய்ச்சி (Psychology—உள நூல்) யும், அறிவிற்குப் பொருத்தமான முறையில் விவகாரஞ் செய்யும் நூலாராய்ச்சி (Logic) யும், தத்துவ நூல் ஆராய்ச்சிக்கு அடிப்படையாக மேலைத் தேசத்தாரால் கைக்கொள்ளப்பட் டுள்ளன. நம்முடைய நாட்டிலும் இவற்றைப்பற்றிய நூல்கள் மிகுதியாக உள்ளன. வடமொழியில் **தருக்கம், நியாயம், மீமாம்சை, ஸ்மிருதி, சாங்கியம்** என்பவை இவற்றின் சார்பாக உள்ளன. மக்களது சமுதாய வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவதற்குரிய அரசியல் நூல் (Politics), செல்வ நூல் (Economics), சமுதாய வாழ்க்கை நூல் (Sociology) முதலியனவும், ஆடவர் பெண்டிர் என்னும் இருதிறத்தார்க்குரிய வாழ்க்கைத் துணை நூல் (Sexual Science) முதலியனவும் அளவின்றி விரிந்து மேலைத் தேசத்தாரது ஆராய்ச்சியின் பெரும்பாகத்தைக் கவர்கின்றன.

மக்களுக்குரிய **அறிவு நூல், செயல் நூல்** என்பனவற்றுள் பின்னையதும் பலதிறப்பட்டு நிலவுகின்றன. பொருள் ஈட்டுதற்குரிய பலவகைத் தொழில்களுள் ஒவ்வொன்றும் பன்னாட் பயிற்சியால் கைவருவதாயுள்

ளது. நாவிற்கினிய பலவகை உணவுகளையும் செம்மையாக அமைத்துக்கொள்ளும் திறமையை ஒருவன் பெறுவதற்கே பல ஆண்டுகள் மடைத்தொழிலை அறிவோடு பயிலவேண்டியதா யிருக்கிறது.

உணவுப் பொருளைச் சேகரித்துக் கொள்ளுவதற்குக் கருவியாக உழவு, வணிகம், கைத்தொழில் முதலியனவும் பெருங் கலைகளுக்குரிய பொருள்களாக முடிகின்றன. கண்ணுக்கினிய ஓவியங்களும் கட்டிடங்களும் அமைப்பது சில பெருங் கலைகளின் முடிந்த பயனாக ஏற்படுகின்றது. காதிற்கினிய இசை நூல் வளமோ அவ்வாறே அளப்பில்லாதது. நாடகமென்பது பல துறைகளையுடைய ஒப்பற்ற ஓர் கவின்கலை. நாட்டியமென்பதே ஒரு பெரு நூலின் பொருளாக அமைந்துள்ளது. மக்களைப்போலவும் மக்கட்குக் கீழ்ப்பட்ட பலவகைப் பிராணிகளைப் போலவும் ஒலிக் குறிப்பினும் செயற் குறிப்பினும் நடிப்பதும் (mimicry) அதன் ஒருவகையாக அடங்குகிறது. உள்ளத்திற்கு இன்பம் பயக்கும் பாட்டுப் பாடுதலாகிய பேராற்றல் எளிதாக வாய்ப்பதன்று. பாட்டின் வகைகளும் வளங்களும் தமிழ்மொழியிலே மிக விரிந்து பல பிரிவுகளோடு விளங்குகின்றன.

பல்வகை உயிர்களுள் மக்களின் சார்பாய நூல்கள் இவ்வாறு விரிந்துகிடப்பக் கீழ்ப்பட்ட அறிவுடைய உயிர்களைப்பற்றிய ஆராய்ச்சியும் பலதரப்பட்டனவா யிருக்கின்றன. விலங்கு, பறவை, ஊர்வன, நீர்

வாழ்வன என்பனவற்றின் உயிரியல்பும் உடம்பியல்பும் வாழ்க்கை முறைகளும் மக்களுக்கு அவற்ருல் உண்டாகிய நன்மை தீமை முதலியனவும் ஆராய்ச்சிக்குரியனவாய்ப் பல நூல்களின் (Zoology etc. விலங்கு நூல், பறவை நூல்) அரும்பொருளாய்த் திகழ்கின்றன. நின்ற இடத்திலே வளர்கின்ற, தாவரங்களின் வகைகளோ நமதுநாட்டுக்கொள்கையின்படி பத்தொன்பது நூருயிரமும் அதற்கு மேற்பட்டனவுமாகும். அவற்றைப் பற்றிய ஆராய்ச்சி (Botany-தாவர நூல்) யும் உயிர் உடம்பிற்ருேன்றி நின்று அழியும் செயலைப்பற்றிய ஆராய்ச்சி (Biology-உயிர்நூல்)யும் தனித்தனிக் கலைகளாக வளர்கின்றன. உயிரில்லாத பொருளாகிய ஐம்பூதங்களும் அவற்ருலாகிய பல்வகைப் பொருள்களும் ஆங்கிலத்தில் பௌதிக நூல் (Physics) பொருட்சார நூல் (Chemistry) என்னும் இருபெரு நூல்களின் அரும் பொருள்களாய்த் திகழ்கின்றன.

அளப்பருந்தன்மை வளப்பெருங் காட்சியையுடைய இந்த ஞாலமானது அந்தரத்தில் இயங்கும் அலகில் கோடி அண்டங்களையுடையதாய் மக்களது ஆராய்ச்சிக்குள் அடங்காது விரிந்தோங்கும் இயல்பிற்று. வானத்திற் காணப்படுகின்ற **ஞாயிறு, திங்கள், உடுக்கள்** முதலியவற்றின் இயல்பையும் இயக்கத்தையும் பற்றிய ஆராய்ச்சி **வான நூல்** எனப்படும். வானில் இயங்கும் சுடர்களின் இயக்கத்தால் **சிறு பொழுது, பெரும் பொழுது** என்னும் கால வேறுபாடுகள் கணிக்கப்படுகின்றன. அவற்றின் வெவ்வேறு நிலைக்குரிய காலங்க

ளில் நிகழும் மக்கள் வாழ்க்கைச் செய்திகளை அவற்றோடு தொடர்புபடுத்தி இவை நன்மை பயப்பனவென்றும் இவை தீமை பயப்பனவென்றும் ஊகித்தறியக்கூடிய கலை **சோதிட** மெனப்படும். இது கணிதநூலின் ஒரு பகுதி யென்பாரு முளர். உள்ளங்கை வரிகளின் அமைப்பைக்கொண்டும் உடலின் அவயவ அமைப்பைக்கொண்டும் ஒருவனது தன்மையையும் அவனுக்கு நேரும் நன்மை தீமைகளையும் முன்னுணர்ந்து கூறும் நூல்களும் சோதிடத்தி லடங்கும். நாம்வாழும் நானிலத்தின் அமைப்பையும் இயல்பையும் ஆராயும் நூல் நிலநூல் (Geology) எனப்படும். நில உருண்டையின் மேற்பரப்பிலுள்ள இடங்களையும் அவற்றின் எல்லைகளையும்பற்றி ஆராய்ச்சி நிலப்பரப்பு நூல் (Geography) எனப்படும்.

இதுகாறும் கூறிய கலைகள் ஒவ்வொன்றும் பல கிளைகளையுடையன. அவை யெல்லாம் விரிப்பிற் பெருகும். யாவும் **கடவுள், உலகம், உயிர்** என்பவற்றின் சார்பாக உள்ளனவாய் இவற்றைத் தொடர்பு படுத்தி நிற்கும் **திருவருட் பெருமை**யையே ஒரு சிறிது விளக்கி நிற்பனவாம்.

# தமிழ்

**தமிழ் மொழி**யானது மிக்க பழமையும் திருத்த மும் தலைமையு முடைய சிறந்த மொழிகள் சிலவற்றுள் ஒன்று. உலகத்திலே பல்லாயிரக் கணக்கான பேச்சுக் களிருந்தாலும் அவைகளை யெல்லாம் மொழி நூலார் சில தொகுதிகளாக வகுத்துக் கணக்கிட்டிருக்கின் றார்கள். இந்தியாவில் வழங்குகின்ற பேச்சுக்களெல் லாம் **ஆரியம், தமிழ்** என்ற இரண்டு பெரிய தொகுதி களி லடங்கும். ஆரிய குடும்பத்தில் பழமையான மொழிகள் **சமஸ்கிருதம், லத்தீன், கிரீக்** முதலியன. அவை இரண்டாயிரம் நூற்றாண்டுகட்கு முன்னரே தாம் பேசப்பட்ட நாடுகளில் சிறப்பாக மதிக்கப் பெற்று உயர்ந்த இலக்கியங்களை உடையனவாக இருந் தன. ஆரியத்திலே **இருக்குவேதம்** மிகப் பழமையா னது. பாரசீகத்திலே **அவஸ்தா** என்ற நூல் வேதம் போல மிக்க பழமை வாய்ந்தது. ஆரியத்தில் **இராமா யணம், பாரதம்** போல கிரீக்கில் ஹோமருடைய **இலி யட், ஒடீசி** என்பவைகள் பெருங் காவியங்களாக விளங்கின. லத்தீனில் **ஈனிட்** என்ற காவியமும் அவ் வாறே பழமையானது. ஆரியத்தில் **உபநிடதங்கள்** போல கிரீக்கில் **சாக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட் டில்** என்னும் தலைவருடைய தத்துவ நூல்கள் கிறிஸ்து பிறப்பதற்குமுன் சிறந்து விளங்கின.

மிகப் பழைய காலத்தே சிறந்த இலக்கிய இலக்கணங்களோடு அம்மொழிகள் திகழ்ந்தமையாலும் தம்மினின்று பல கிளை மொழிகள் எழுவதற்குக் காரணமா யிருந்தமையாலும் அவை உயர்தனிச் செம்மொழிகள் என்று கருதப்பட்டன. வட மொழியில் நின்று **ஹிந்தி, வங்காளி, பஞ்சாபி,** முதலிய கிளை மொழிகள் உண்டாயின. லத்தீனிலிருந்து **ஸ்பேனிஷ், போர்ச்சுக்கீயம், பிராஞ்சு, இட்டாலியம்** முதலிய கிளை மொழிகள் தோன்றின. இப்பொழுது கிளை மொழிகளே பேச்சு வழக்கில் உள்ளன. தலை மொழிகள் பேச்சு வழக்கிலில்லை.

இவ்வாறு ஆரிய குடும்பத்தின் நிலையிருப்பவும் தமிழின் தன்மையும், நிலையும் எவ்வாறு உள்ளன என்று ஆராய்வோம்.

தென்னிந்தியாவிலுள்ள மொழிகளுக் கெல்லாம் தலையாயது **தமிழ் மொழி.** தமிழிலேயுள்ள பழமையான இலக்கியமாகிய **தொல்காப்பியம்** வால்மீகி ராமாயணத்திற்குச் சற்று முற்பட்டதாய்த் தெரிகிறது. தொல்காப்பியத்திற்கு முதல் நூலாகிய **அகத்தியம்** இப்பொழுது காணப்படவில்லை. தொல்காப்பியர் காலத்துக்கு முன்னேயே பல நூல்கள் தமிழிலிருந்தன வென்று தொல்காப்பியமே கூறுகின்றது. அந் நூல்களும் அகத்தியமும் கன்னியா குமரிக்குத் தென்பாலிருந்து இராமாயண காலத்திற்கு முன்பாகவே கடல் கொள்ளப்பட்ட பெரு நாட்டிலே தமிழ்ச் சங்கம் ஒன்றால் போற்றப்பட்டு வந்தன. தொல்

காப்பிய காலத்திற்குப் பின்புதான் வட மொழிக்குச் சிறந்த இலக்கணமாக இப்பொழுது விளங்குகின்ற **பாணினீயம்** எழுதப்பட்டதாகத் தெரிகின்றது. இத ளுல் தமிழ் மிகப் பழமையான இலக்கணமுடையது என்பது விளங்கும். வட மொழியில் காளிதாசர் நூல்களியற்றுவதற்கு முன்னேயே தமிழிலே கடைச் சங்கப் புலவர் பல அரிய தமிழ் நூல்களை இயற்றி ஞர்கள். இராமாயண காலத்திற்கு முன் கடல் கொண்ட நாட்டில் விளங்கிய சங்கம் **முதற் சங்கம்** எனப் பெயர் பெறும். இராமாயண காலத்திலிருந்த சங்கம் **இடைச் சங்கம்;** அதற்குப் பின் நிலவியது **கடைச் சங்கம்.** இம் மூன்று சங்கங்களும் நெடுநாள் நிலை பெற்றிருந்து பல அரிய **இயல் இசை நாடகம்** என்னும் முத்தமிழ் நூல்களை இயற்றின. அவ்வளவு பழமையான காலத்தே மற்றப் பழைய மொழிகளுள் உயர்ந்த இலக்கியங்கள் மிகக் குறைவுபட்டிருந்தன. காளிதாசர் காலத்திலேதான் அவைகள் வடமொழி யில் அதிகமாயின. **திருவள்ளுவர்** முதலிய உயர்ந்த நீதி நூல்கள் காளிதாசர் காலத்திற்கு முன்னேயே தமிழில் உண்டாய்விட்டன. இவ்வாறே சிறந்த பெருங் காப்பியங்களாகிய **சிலப்பதிகாரம், மணிமேகலை** முத லிய நூல்கள் கடைச் சங்கத்தார் காலத்திலேயே நின்று நிலவின. **அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, பத்துப் பாட்டு** முதலிய உயர்தனித் தமிழ் நூல்களெல்லாம் கடைச்சங்கத்தார் காலத்தி லேயே இயற்றப்பட்டன. அக்கால்த்தே அவ்வளவு

அருமையான நூல்கள் வேறு எந்த உயர்தனி மொழி களிலும் கிடையா? கடைச்சங்கத்தார் காலத்திற்குப் பின்னும் **தேவாரம் திருவாசகம் திருவாய்மொழி** முதலாய திருவருட் பாடல்கள் செம்மையாகவும், மிகுதியாகவும் தமிழிலுள்ளபடி வேறு எந்த மொழியிலும் அமையவில்லை. இன்னும் அளவிறந்த **நீதிநூல்களும், பெருங் காப்பியங்**களும், **சிறு காப்பியங்**களும், **இலக்கணங்**களும், **தத்துவ நூல்**களும் வேண்டிய அளவு தமிழில் ஏற்பட்டிருக்கின்றன.

பிற உயர்மொழிகள் எவ்வளவு பழமையோ அவ்வளவு பழமை தமிழுக்கு இருந்தும் இன்னும் அது பேச்சு வழக்கிலேயே இருந்து வருகின்றது. வடமொழி, லத்தீன் முதலியவைகள் போல அது வழங்காது அற்றுப் போகவில்லை.

**தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம்** என்ற மொழிகள் ஆதியில் தமிழின் பகுதிகளாகவே இருந்தன. இடைக்காலத்திலேதான் வடநாற் கலப்பு அவைகட்கு ஏற்பட்டு மிகுந்தது. ஆதல்பற்றித் தமிழ்க் குடும்பத்திற்குத் தமிழே சிறந்த தலைமொழியாகக் கருதப்படும். மிக்க பழமையும் ஒப்பில்லாத இலக்கியச் செறிவும் தென்னிந்திய மொழிகளுக்குத் தலைமையும் தமிழுக்கு இருப்பதினாலே உலகத்திலுள்ள உயர் மொழிகளுள் தமிழ் சிறந்த ஒரு மொழி என்று கூறுதல் தவறாகாது.

தமிழ் மொழி பேசும் மக்களுள் அம்மொழியில் பற்று வைத்து அதனை வளர்க்கவேண்டுமென்பார் தற்காலத்திலே மிகச் சிலர். மற்ற மொழியாளர்க்குத் தத்தம் மொழிகளிலுள்ள ஆர்வம் தமிழ் மக்கட்குத் தமிழில் இல்லை. தமிழ் நாட்டிலேயே ஒரு சாரார் தமிழைத் தாய் மொழியாகக் கருதுவதில்லை. அதனால் தமிழ் நூல்களுக்கும் தமிழ்ப் புலவர்களுக்கும் பாதுகாப்பும் ஊக்கமும் குறைவாக இருக்கின்றன. தெலுங்கு பேசுகின்ற எவ்வகையாரும் எக் குலத்தாரும் எவ்வாறு ஒற்றுமையாகத் தங்கள்மொழியை வளர்க்க முயல்கின்றனரோ, அவ்வாறே தமிழ் நாட்டிலுள்ள எல்லா வகுப்பினரும் தமிழைப் போற்றுவதற்கு ஒருங்குசேரல் வேண்டும். உயர்ந்த பரிசோதனைகளிலே தமிழைத் தாய் மொழியாக உடையவர்க்குத் தமிழ் கட்டாயப் பாடமாக இருத்தல் வேண்டும். உயர்ந்த பரிசோதனைகளில் தமிழைப் பாடமாகக் கற்போர்க்குப் பிறமொழி உடன் கற்க வேண்டுமென்ற கட்டாயம் இருத்தல் கூடாது. தமிழிலே உள்ள பலவகைத் துறைகளுள் ஒவ்வொன்றினையும் நன்கு கற்றுத் தேர்ச்சி அடைதற்குரிய சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும். நீதி நூல்கள், சங்க நூல்கள், இலக்கண நூல்கள், பிற இலக்கிய நூல்கள், வைணவ நூல்கள், மருத்துவ நூல்கள், இசை நாடகம் ஓவியம் முதலியவற்றின் சார்பான நூல்கள் என்னும் இவைகளைத் தனித் தனி கற்றுப் பெரும்புலமை அடைவதற்குத் தக்க கல்விச் சாலைகளும், புத்தகசாலைகளும், பிற

உதவிகளும அமைத்தற்கு வேண்டிய முயற்சிகளைத் தமிழ் நன்மக்கள் ஒருங்கியைந்து செய்வார்களாயின் தமிழ் தனது பண்டை உயர் நிலைமை எய்துவதற்கு ஏதுவாகும். ஆங்கிலம் முதலிய பிறமொழி நூல்களிலிருந்து அரிய உண்மைகளைத் தமிழில் நன்றாக எழுதி யாவர்க்கும் பயன்படச் செய்வதற்கு மொழி பெயர்ப்புச் சங்கங்கள் அமையப்பெற வேண்டும். பண்டை உயர்மொழிகளின் உயர்வும் தற்கால மொழிகளுக்குரிய பேச்சு வழக்கும் தமிழுக்கு அமைந்திருத்தலால் அஃது எல்லையற்ற பெருமையோடு வளர்ந்தோங்குதற்குரிய மொழியாக இருக்கின்றது. ஆதலால் தமிழ் மக்கள் அதனைக் குறிக்கொண்டு பாதுகாத்துப் போற்றற் பாலர்.

**நீதி நூல்கள்:**—திருவள்ளுவரும், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும், கம்பர்காலத்து ஒளவையார் நூல்களும், தற்கால நூல்களும் நீதி நூல் கற்பவருக்குப் போதுமானவைகள்.

**சங்க நூல்கள்:**—எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, மணிமேகலை, சிலப்பதிகாரம், சிந்தாமணி, கல்லாடம் முதலியன.

**அருட் பாடல்கள்:**—பன்னிரு திருமுறை, நாலாயிரப் பிரபந்தம், பட்டணத்தார் பாடல், தாயுமானூர், திருப்புகழ், குமரகுருபரர், சிவப்பிரகாசர், சிவஞான முனிவர் முதலியன.

**பிற்காலப் பெருங்காப்பியங்கள்** :—கம்ப ராமாயணம், கந்த புராணம், பெரிய புராணம், வில்லிபாரதம், தணிகைப்புராணம், காஞ்சிப்புராணம், நைடதம், திருவிளையாடற் புராணம், தேம்பாவணி, சீறாப் புராணம், கலிங்கத்துப் பரணி, நளவெண்பா, முதலியன.

அறிவு விளக்க வாசகம்

முற்றிற்று.

வழங்கும் பகுதி